யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

வலம்புரி
VALAMPURI

அழகிய தங்க நகைகளை
உங்கள் எண்ணம்போல்
தெரிவுசெய்திட
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
176/1, நாவலர் வீதி,
118, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1504)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 மாசி 17 வெள்ளிக்கிழமை (23-02-2001) தொலைபேசி: 3378 ஒலி: 65

★ சமாதான முயற்சிக்கு ஆதரவாக ஒருமாத

# யுத்த நிறுத்தத்தை புலிகள் 3-வது தடவையாக நீடிப்பு!

## அரசு மீது அழுத்தம் கொடுக்குமாறு சர்வதேச சமூகத்திடம் வேண்டுகோள்

(வவுனியா)

நீண்டகாலமாக இடம்பெற்று வரும் இன யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து நிரந்தர சமாதானப் பேச்சிற்கு வழிவகுக்கும் நல்லெண்ண முயற்சியாக தமிழீழ விடுதலைப் புலிகள் மூன்றாவது தடவையாக மேலும் ஒரு மாத கால யுத்தநிறுத்த நீடிப்பை நேற்று அறிவித்துள்ளனர்.

இந்த யுத்த நிறுத்த நீடிப்பு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகமான வன்னியில் இருந்து உத்தியோகபூர்வ அறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

புலிகளின் யுத்தநிறுத்த அறிவிப்பை ஏற்று பேச்சுவார்த்தையில் ஈடுபட சிறிலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு அமெரிக்கா, பிரிட்டன். இந்தியா மற்றும் ஐரோப்பிய நாடுகளையும் விடுதலைப் புலிகள் கேட்டுள்ளனர்.

யுத்த நிறுத்த நீடிப்பு சம்பந்தமாக நோர்வே தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் மூலம் உத்தியோகபூர்வமாக இலங்கை அரசுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளினால் அறிவிக்கப்பட்ட யுத்த நிறுத்த நீடிப்பானது, நாளை நள்ளிரவு 12 மணியில் இருந்து மார்ச் மாதம் 24ந் திகதி நள்ளிரவு 12 மணி வரை அமுலில் இருக்குமென அறிவித்துள்ளனர்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 24ந் திகதியில் இருந்து 2001 ம் ஆண்டு ஜனவரி மாதம் 24ம் திகதிவரை முதலாவது யுத்த நிறுத்த அறிவிப்பும், அதன் பின் ஜனவரி

→8-ம் பக்கம் பார்க்க

## தபால் பொதிகள் வந்தன

(யாழ்ப்பாணம்)

திருமலையில் இருந்து 150 வெளியூர் தபால் பொதிகள் நேற்று யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டுள்ளது.

இதனைவிட விமானம் மூலமும் 10 தபால் பொதிகள் வந்துள்ளன.

இதேவேளை 40 தபால் பொதிகள் யாழ்ப்பாணத்தில் இருநதும் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

(வ-12,15)

## உள்நாட்டு இடம் பெயர்வில் இலங்கை முதலிடம்

(கொழும்பு)

ஆசியாவில் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களை அதிகமாகக் கொண்ட நாடு இலங்கை என இன்ரபிறஸ் சேவிஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஆசியாவில் 24 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் உள்நட்டிலேயே இடம்பெயர்ந்து வாழ்துவருகின்ற அதேவேளை இலங்கையில் மட்டும்6லட்சம் பேர் உள் நாட்டில் இடம் பெயர்ந்து வாழ்கின்றார்கள்.

பூட்டான், சீனா, பிலிப்ஸபன், ஆப்கான், இந்தோனேசியா, பர்மா, கிழக்கு தீமோர், ஆகிய ஆசியநாடுகளில் 18 இலட்சம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்என அந்த ஊடக நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

(ந-5

## ஐரோ.தூதுக்குழுவுடன் அ.ச.இ. பிரதிநிதிகள் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டு மக்களின் இன்றைய நிலமைகளை, ஐரோப்பிய பாராளுமன்றத் தூதுக்குழுவுக்கு அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகள் நேற்று இடம் பெற்ற சந்திப்பின் போது எடுத்துவிளக்கியுள்ளனர்

நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வருகைதந்த இத் தூதுக்குழுவினர் பிற்பகல் 2. 15 மணிக்குஅரசசார்பற்ற

→ 8ஆம் பக்கம் பார்க்க

## புலிகள் யுத்த நிறுத்தம் செய்தாலும் பேச்சுக்குப் பின்பே அரசு ஆராயும்

### அமைச்சர் டி. எம். ஜயரட்ணா தகவல்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை அறிவித்தாலும் முதலில் பேச்சுவார்த்தைக்கான திகதிநிர்ணயிக்கப்பட்டு பேச்சுவார்த்தை ஆரம்பமாகிய பின்பே யுத்த நிறுத்தம் பற்றி அரசு ஆலோசிக்கும்?

இவ்வாறு பொது ஜன ஐக்கியமுன்னணியின்செயலாளரும், அமைச்சருமான டி. எம். ஜயரட்ணா தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிசள் ஒரு தலைட்பட்சமான யுத்த நிறுத்த அறிவிப்பை மூன்றாவது தடவையாக அறிவித்ததையடுத்தே டி. எம். ஜயரட்ண மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதே வேளை புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பை

→ 8ஆம் பக்கம் பார்க்க

## கப்பலில் வந்த கைதி தப்பி ஓட்டம

(யாழ்ப்பானம்)

திருகோண மலையிலிருந்து சிற்றிஒவ் றிங்கோ கப்பலில் கொண்டு வரப்பட்ட கைதி ஒருவர் யாழ் பஸ் நிலையத்தில் இருந்து தப்பி ஓடியுள்ளார்.

திருகோணமலையிலிருந்து சிறைச்சாலை காப்பாளர்களின் பாதுகாப்புடன் யாழ்ப்பாணத்திற்கு கூட்டிவரப்பட்ட ஒன்பது கைதிகளில் ஒருவர் இயற்கைக் கடனை முடிக்க உதவுமாறு கூறியதையடுத்து பாதுகாப்பு உத்தி

→8ஆம் பக்கம் பார்க்க

## ஆயிரம் வீடுகளை அமைக்கக் கோரி யாழ்நகரில் நேற்றுப் பேரணி

(யாழ்ப்பாணம்)

வலிவடக்கில்இருந்து இடம் பெயர்ந்து பல்வேறு நலம்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்களால் ஆயிரம்வீட்டுத் திட்டத்தை உடன் நடைமுறைப் படுத்தித்தருமாறு கோரியாழ்நகரில் நேற்றுக் காலை ஆர்ப்பாட்டபபேரணிஒன்று நடத்தப்பட்டது.

இந்தஆர்ப்பாட்ட பேரணி துரையப்பா விளையாட் அரங்கில் இருந்துகாலை10

→ 8-ம் பக்கம் பாயக்க

## யாழ். மாநகர சுகாதாரப் பிரிவு விவகாரம் சுமுகமாகத் தீர்க்க மேயர் ரவிராஜ் உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகரசபையின் சுகாதாரப் பிரிவு ஸ்தம்பிக்கும் நிலை குறித்து வலம்புரி கடந்த சில தினங்களாக செய்தி வெளியிட்டிருந்தது.

இது குறித்து யாழ். மாநகர மேயர் ரவிராஜ் அவர்கள் நேற்று இரவு வலம்புரியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நிலைமைகளை எடுத்துக் கூறியிருந்தார். அவரது கருத்தில்

### திங்கள் யாழ். வருவார்

யாழ்.மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரன் அவர்களின் அப்பளுக்கற்ற சேவையைத் தான் மதிப்பதாகவும் அவரின் சேவையில் தான் ஒருபோதும் குறைகள் கண்டதோ அன்றி குறையாகப் பேசியதோ இல்லையெனவும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

அச் சந்தர்ப்பத்தில் வைத்திய கலாநிதி தெய்வேந்திரன் அவர்களின் கடந்த கால சேவையை மறந்துவிட முடியாதெனவும், யுத்த சூழ்நிலையிலும், மக்களோடு மக்களாக இருந்து அவர் ஆற்றிய சேவையை மக்களாலோ ஊழியர்களாலோ மறக்கமுடியாதுஎன்பதையும் வலம்புரி மேயரிடம் எடுத்துக்கூறியதுடன்

வைத்திய கலாநிதி தெய்வேந்திரனின் சேவையை இழப்பதால் மக்களே பாதிப்படைவர் என்பதையும் சுட்டிக்காட்டியது.

இந்நிலையில் ஓர் சுமூகமான சூழ்நிலையை ஏற்படுத்தி வைத்திய கலாநிதி தெய்வேந்திரனின் சேவையை

→ 2ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பில் கைக் குண்டுகள்

(கொழும்பு)

கொழும்பு புறக்கோட்டை குணசிங்கபுரத்தில் சக்தி வாய்ந்த இரண்டு கைக் குண்டுகள் கண்டெடுக்கப் பட்டுள்ளன.

இந்த இரு குண்டுகளும், அப்பகுதியில் இடம் பெற்ற தேடுதல் நடவடிக்கையின் போதே குப்பை வாளி ஒன்றில் இருந்து கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

(வ)

## சிறு விளம்பரம்

### வீடு தேவை

யாழ். நகர எல்லைக்குள் வேலை புரியும் இரு அங்கத் தவரைக் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு, யாழ். நகரை அண்மித்த பகுதியில் வாடகைக்கு வீடு தேவை. ANNEX ஆக வசிப்பதும் விரும்பத்தக்கது தொடர்பு ''வலம்புரி'' விளம்பர இலக்கம் 106, இல 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். (கி-1515)

## சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரி அணிக்கும் ஏனைய அணிகட்கும் இடையில் நடை பெற்று வரும் 19 வயதுப் பிரிவினருக்கான கிரிக்செட் சுற்றுப் போட்டியில், இன்றும் நாளையும் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் மத்திய கல்லூரி அணியுடன்மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதும். (உ-9)

# குற்றப்புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைக்கு ஒத்துழைக்குமாறு பொதுமக்களிடம் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் காணமல் போனோர் கடத்தப்பட்டோர் தொடர்பாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மேற் கொண்டு வரும் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ் பொலிஸார் கேட்டுள்ளனர்.

யாழ்ப்பாண பத்திரிகைகளில் வெளிவந்த பெயர் விபரங்களின் படி பலர்விசாரணைக்கு சமுகமளித்துள்ளனர் எனவும் இவ் விசாரணைகளுக்கு கண்ணால்கண்ட காதால் கேட்ட சாட்சிகளும் வரவேற்கப்படுகின்றனர் எனவும் தெரிவித்துள்ளது.

முறைப்பாட்டுக் காரர்கள், சகலவிதமான முறைப்பாடு செய்யப்பட்ட புகைப்படபிடிதி ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறும் யாழ் பொலிஸார் மேலும்கேட்டுள்ளனர்.

கோப்பாய், ஊர்காவற்றுறையாழ்ப்பாணம்பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்வோர் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திற்கு இளவாலைதெல்லிப்பழைமானிப்பாய்சுன்னாகம் பகுதி பொலிஸில் முறைப்பாடுசெய்தவர் கள்சுன்னாகம்பொலிஸ் நிலையத்திலும், கொடிகாமம், நெல்லியடி, அச்சுவேலி, பருத்தித்துறை பொலிஸ் நிலயங்களில் முறைப்பாடு செய்தோர் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திற்குவிசாரணைக்கு செல்லுமாறும் பொலிஸார் கேட்டுள்ளனர்.

இவ்விசாரணைகளை விரைவில் மேற்கொண்டு ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளதால் மக்களை முன்வந்து இப்பணிகளுக்கு உதவி செய்யும் படியும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை,

கதிரவேல் விஜிநரன் என்பவரின் முறைப்பாட்டாளர் மாரிமுத்து கதிரவேல் [சரசாலை சாவகச்சேரி என்பவரையும்] யாழ் பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு பொலிஸார் அறிவித்துள்ளனர். [உ-12]

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகின்றன.

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 171753 ஏ | 171753 பி |
| 171753 சி | 171753 டி |
| 171753 ஈ | 178369 ஏ |
| 178369 பி | 178417 ஏ |
| 179939 ஏ | 179987 ஏ |
| 179993 ஏ | 180047 ஏ |
| 180047 பி | 180047 சி |
| 180065 ஏ | 180065 பி |
| 180142 ஏ | 180143 ஏ |
| 180297 ஏ | 180297 பி |
| 181713 ஏ | 181713 பி |
| 181713 சி | 181713 டி |
| 181713 ஈ | 181743 ஏ |
| 181759 ஏ | 181759 பி |
| 181759 சி | 181762 ஏ |
| 181762 பி | 181762 சி |
| 181777 ஏ | 181777 பி |
| 181782 ஏ | 181782 பி |
| 181815 ஏ | 181815 பி |
| 181815 சி | 182878 ஏ |
| 181894 ஏ | 181894 பி |
| 181894 சி | 181904 ஏ |
| 181904 பி | 181912 ஏ |
| 181936 ஏ | 181936 பி |
| 181936 சி | 181945 ஏ |
| 181945 பி | 181945 சி |
| 181945 டி | 181950 ஏ |
| 181950 பி | 181962 ஏ |
| 182013 ஏ | 182052 ஏ |
| 182052 பி | 182052 சி |
| 182052 டி | 182071 ஏ |
| 182095 ஏ | 182095 பி |
| 182146 ஏ | 182146 பி |
| 182155 ஏ | 182987 ஏ |
| | 184367 ஏ |
| 184357 ஏ | 184389 ஏ |
| 184405 ஏ | 184406 ஏ |
| 184406 பி | 184406 சி |
| 184460 ஏ | |

### உடுவில்

| | |
|---|---|
| 184328 ஏ | |

### கோப்பாய்

| | |
|---|---|
| 180060 ஏ | 180060 பி |
| 180060 சி | 180247 ஏ |
| 180247 பி | 182023 ஏ |
| 184384 ஏ | 184423 ஏ |
| 184457 ஏ | 184470 ஏ |
| 184471 ஏ | |

### நல்லூர்

| | |
|---|---|
| 175242 ஏ | 179884 ஏ |
| 180206 ஏ | 180266 ஏ |
| 180285 ஏ | 181718 ஏ |
| 181734 ஏ | |
| 181781 ஏ | 181781 பி |
| 181781 சி | 181781 டி |
| 181794 ஏ | 181794 பி |
| 181826 ஏ | 181844 ஏ |
| 18 852 ஏ | 181852 பி |
| 181888 ஏ | 181888 பி |
| 181906 ஏ | 181906 பி |
| 181971 ஏ | 181999 ஏ |
| 181999 பி | 182017 ஏ |
| 182064 ஏ | 182064 பி |

| | |
|---|---|
| 182077 ஏ | 182079 ஏ |
| 182079 பி | 181121 ஏ |
| 182145 ஏ | 182145 பி |
| 182170 ஏ | 182114 ஏ |
| 184474 ஏ | 184497 ஏ |

பெப் மாதம்21 – ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப் பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேசசெயலக ரீதியாகத் தரப்படுகின்றன.

### சங்கானை

| | |
|---|---|
| 179275 ஏ | 179275 பி |
| 179275 சி | 181478 ஏ |
| 181478 பி | 181566 ஏ |
| 181692 ஏ | 182653 ஏ |
| 182653 பி | 182799 ஏ |
| 183072 ஏ | 183105 ஏ |

### கரவெட்டி

| | |
|---|---|
| 154870 ஏ | 158156 ஏ |
| 160155 ஏ | 160155 பி |
| 160155 சி | 162024 ஏ |
| 162024 பி | 162024 சி |
| 162821 ஏ | 165399 ஏ |
| 165399 பி | 165399 சி |
| 165399 ச | 165407 ஏ |
| 169468 ஏ | 174492 ஏ |
| 174492 பி | 174492 சி |
| 174492 டீ | 176414 ஏ |
| 176414 பி | 177520 ஏ |
| 177520 பி | 177824 ஏ |
| 177824 பி | 177824 சி |
| 177824 சி | 177824 டி |
| 177874 ஏ | |

### நல்லூர்

| | |
|---|---|
| 165485 ஏ | 181497 ஏ |
| 181498 ஏ | 182287 ஏ |
| 183030 ஏ | 183030 பி |

### பருத்தித்துறை

| | |
|---|---|
| 151726 ஏ | 151726 பி |
| 151726 சி | 160032 ஏ |
| 168058 ஏ | 168058 பி |
| 168058 சி | 169514 ஏ |
| 169514 பி | 169514 சி |
| 172299 ஏ | 172299 பி |
| 172299 சி | 174565 ஏ |
| 177675 ஏ | 177675 பி |
| 177756 ஏ | 177756 பி |
| 177757 ஏ | |
| 177757 பி | 177757 சி |
| 177799 ஏ | 177816 ஏ |
| 177816 பி | 177888 ஏ |
| 177897 ஏ | 177897 பி |
| 177897 சி | 177897 டி |
| 177897 ஈ | 177937 ஏ |
| 177953 ஏ | 177978 ஏ |
| 177993 ஏ | 177007 ஏ |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 179451 ஏ | 179451 பி |
| 182365 சி | 182635 ஏ |
| 182635 பி | 182873 ஏ |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 175034 ஏ | 175034 பி |
| 175034 சி | 175034 டி |
| 175034 ஈ | 175034எவ் |
| 175034 ஜி | 183209 ஏ |

### உடுவில்

| | |
|---|---|
| 182688 ஏ | 182688 பி |
| 183132 ஏ | 183146 ஏ |
| 183158 ஏ | 183158 பி |
| 183343 ஏ | |

# செக். குடியரசின் பாதுகாப்பு அமைச்சர்சென்ற ஹெலி இடையில் தரைஇறக்கம்

(கொழும்பு)

செக் குடியரசின் பாதுகாப்பு அமைச்சர் வால்டிமிர் வெற்சியை கடந்த சனியன்று சிகிரியாவிற்கு ஏற்றிச்சென்ற இலங்கை விமானப்படையின் எம். ஐ 17 ரக ஹெலிகொப்ரர் அவசர அவசரமாகத் தரையிறக்கப்பட் து கலேவெல பகுதியில் நிலவிய காலநிலை சீரின்மையாலேயே ஹெலிகொப்ரர் அப்பகுதியில் தரையிறக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து இவர்கள் தரைவழியாக கார்மூலம் சிகிரியாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (உ-9)

# கிளிநொச்சி ஆலயத்தில் தனித்தமிழில் பூஜை

(வவுனியா)

கிளிநொச்சி உருத்திரபுரம் சிவாலயத்தில் சிவராத்திரி பூஜை வழிபாடுகள் தனித் தமிழில் இடம்பெற்றதாக தெரியவந்துள்ளது.

தாய்மொழியில் வழிபாடியற்றும் இம் முயற்சியினை தமிழ் ஆர்வலர்கள் பலரும் வரவேற்றுள்ளனர். [உ]

# சித்தன்கேணிப் பகுதியில் திருட்டுக்கள் அதிகரிப்பு

[வட்டுக்கோட்டை]

சித்தன்கேணிப் பகுதியில் இரவு நேரத் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளது.

கடந்த புதன் கிழமை இரவு இரண்டு வீடுகளில் திருட்டுக்கள் நடைபெற்றுள்ளது. ஒரு வீட்டில் திருட்டு முயற்சி வீட்டாரின் முயற்சியால் முறியடிக்கப்பட்டது

இத்திருட்டு சம்பவத்தின் போது ஒரு வீட்டில் குடும்பப் பெண்ணின் கழுத்தில் அணிந்திருந்த தாலிக் கொடியும், சிறுதொகை பணமும், மற்றொருவீட்டில் ரீ.வி, டெக், சிறுதொகைப்பணம் என்பனவும் களவாடப்பட்டுள்ளது

இத்தகைய திருட்டுச் சம்பவங்களையடுத்து இப்பகுதி மக்கள் நித்திரையின்றி விழிப்புடன் காவல் புரிகின்றமையை அவதானிக்க முடிகிறது. (செ-24)

# யாழ்-கொழும்பு பயணிகள் விமான சேவையில் தற்காலிக மாற்றம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண-கொழும்பு பயணிகள் விமான சேவையில் மாற்றம் கொண்டுவரப் பட்டுள்ளது.

இரத்மலானைக்கும் பலாலிக்கும் இடையில் இதுவரை மேற்கொள்ளப்பட்டு வந்த விமான சேவை நாளை சனிக்கிழமை தொடக்கம் கட்டுநாயக்காவிற்கும் பலாலிக்கும் இடையில் நடத்தப்பட இருப்பதாக யாழ்ப்பாண சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

இந்த நடைமுறை இரண்டு வார காலத்திற்கு அமுலில் இருக்கும் எனவும் விமானப் படையின் 50 ஆண்டு நிறைவு நிகழ்வுகள் இரத்மலானை விமான நிலையத்தில் நடத்தப்பட இருப்பதாலேயே இம் மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (உ-9)

## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளைசனிக்கிழமை மு. ப. 9 மணிக்கு அதிபர் வ. ஆறுமுகம் தலைமையில் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராககோப்பாய் பிரதேச செயலக நிதி உதவியாளர் க. நாகேந்திரராசா சிறப்பு. விருந்தினர்களாக கோப்பாய்க்கோட்ட உதவிக்கல்விப்பணிப்பாளர் இ. சிவஞானசுந்தரம், புத்தூர் கிழக்கு கிராம அலுவலர் க. வைத்தியநாதன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (உ)

## கைது

(கோப்பாய்)

இருபாலைச் சந்திப் பகுதியில் நீண்ட நாட்களாக கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வந்தநபர்ஒருவர் கோப்பாய்ப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (உ-75)

## யாழ். மாநகர...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதென மேயர் உறுதி அளித்துள்ளார்.

மேயர் ரவிராஜ் அவர்கள் மேற்கொள்ளும் சுமுகமான தீர்விற்கு வலம்புரி என்றும் தனது ஒத்துழைப்பை வழங்கும். அதனால் இன்று குருஷேத்திரத்தில் வெளியாக இருந்த **சுகாதாரப்பகுதியைப் பழிவாங்குவது ஏன்?** என்ற கட்டுரை அச்சாகிக் கொண்டிருந்தபோதிலும் அது இடையில் நிறுத்தப்பட்டது.

பத்திரிகைகள் சுமுகமான நிலையை ஏற்படுத்தவே பணியாற்ற வேண்டும். மாறாக 'கொழுவிவிட்டுக் கூத்துப் பார்க் ம்' பாதகத்தைச் செய்யக்கூடாது என்ற தர்மத்தை வலம்புரி ஒருபோதும் மறந்துவிடாது. அதேவேளை பத்திரிகைகள் விட்ட குழப்பங்களால் நிர்வாகம் குழம்புவது, தனிமனிதன் வேதனைப்படுவது எல்லாம், காரணமாக இருந்தவர்களின் தனிப்பட வாழ்க்கையில்-முதுமையில் தீராத துன்பத்தை விளைவிக்கும்.

அதேவேளை நீதி-உண்மை மழுங்கடிக்கப்பட்டு சேவையாளர்களுக்கு துரோகம் இழைக்கப்படும் போது அதைப்பார்த்துக் கொண்டிருப்பதும் தர்மம் அன்று.

இந்நிலையில் யாழ்.மாநகர முதல்வர் ரவிராஜ் அவர்கள் எடுக்கவுள்ள சுமுகமான நடவடிக்கைக்கு வலம்புரி தனது ஒத்துழைப்பை வழங்கும் என்பதுடன் புதிய ஆணையாளர் இராசா தணிகாசலம் அவர்களும் பொறுமையுடனும், நிதானத்துடனும்செயலாற்றி யாழ். மாநகர மக்களுக்கு நற்சேவையாற்றுவார் என வலம்புரி நம்புகிறது.

முன்னாள் ஆணையாளரைக் குறைகூறியோ அல்லது சுகாதாரப் பகுதியில் குறைகண்டோ நானும் சாதித்தேன் என்றால் நமது ஓய்வு காலத்திலும் நம்மைப்பழி தீர்க்க ஒருவன் வருவான் என்ற உண்மையை மறந்துவிடக் கூடாது.

அதே வேளை யுத்தத்தின் மத்தியிலும் இந்த மண்ணிலிருந்து சேவையாற்றிய தற்காலிக சுகாதார ஊழியர்களை ஒருகணத்தில் – ஒரு கையொப்பத்துடன் வீட்டுக்கு அனுப்பிவி லாம் அதற்குச் சட்டம் இடம் கொடுக்கும். சிலர் கரகோஷம் போடுவர். ஆனால் வேலை நீக்கிய பாவம் நம்மை சும்மாவிடாதல்லவா?

நாம் எல்லோரும் ஒரு தாய் மக்கள்– தமிழ் மக்கள், நாம் ஆற்றும் சேவை பேரினவாதத்தின் தாண்டவத்தில் நசிந்து போன நம் தமிழ்ச் சகோதர்களுக்கே. எமக்குள் ஓர் ஒற்றுமை – ஓர் புரிந்துணர்வு இல்லையாயின் இரண்டு இனங்களுக்கிடையில் எவ்வாறு ஒற்றுமை எற்பட முடியும்.

எம்மினத்திற்கு நாம் உதவாவிட்டால்- எம்மவர்க்கு நாம் வேலை வாய்ப்பு வழங்காவிட்டால் யார் உதவுவர். எனவே இதனைப் புரிந்து கொண்டு செயற்படுவோமாக. (ஆ-ர்)

## 56 லட்சம்---

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆயிரத்து 850 ரூபா

தற்காலிக வதிவிடம் 12 இலட்சத்து 51 ஆயிரத்து 875 ரூபா

மலசலகூடம் அமைத்தல் 1 இலட்சத்து 33 ஆயிரத்து 49 ரூபா

நீர் வசதிகள் 3 இலட்சத்து 24 ஆயிரத்து 884 ரூபா

விவசாயிகளது வருமான உயர்ச்சிக்கான சுழற்சிக்கடன் மாதகல், சில்லாலை 5 இலட்சம் ரூபா

மீனவர்களது வருமான உயர்ச்சிக்கான சுழற்சிக்கடன் மாதகல் 5 இலட்சம் ரூபா (உ-12)

### ஐரோப்பிய நாடுகள்

# விடுதலைப்புலிகளுக்கு உதவுவதை உடனடியாக நிறுத்த வேண்டும்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கு ஐரோப்பிய நாடுகள் உதவுவதை உடனடியாக நிறுத்த வேண்டும் என ஜே.வி.பி கோரிக்கை விடுத்துள்ளது.

பல ஐரோப்பிய நாடுகள் இலங்கையின் பிரச்சினைக்கு, ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காணப்பட வேண்டும் எனக் கூறுகின்றன. இது உண்மையாக இருந்தால், ஐரோப்பிய நாடுகள் பிரிவினை வாதப் புலிகள் இயக்கத்தினருக்கு வழங்கிவரும் உதவி ஒத்துழைப்புக்களை உடனடியாக நிறுத்தி தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும்.

இதேவேளை இலங்கைப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வரும் நோர்வே நாடு பக்கச் சார்பாகச் செயற்படுகின்றது.

இதன் காரணமாகவே அவர்களது நடவடிக்கைகளுக்கு நாம் எதிர்ப்புத் தெரிவித்திருந்தோம்.

புலிகள் இயக்கத்திற்கான பக்கச் சார்புத் தன்மையிலிருந்து விலகி இராஜதந்திர ரீதியில் நோர்வே செயற்பட்டால் அதற்கு நாம் ஆதரவு வழங்குவோம்.

இலங்கையில் நிலவுவது இனப்பிரச்சினை அல்ல; தேசியப் பிரச்சினை. இப்பிரச்சினை ஏற்படுவதற்கான மூல காரணம் பொருளாதார சமமின்மையும், ஜனநாயக விழுமியங்களின் சீரழிவுகளுமே ஆகும்.

இந்நாட்டில் வாழும் சகல இனமக்களும் சமமாக மதிக்சப்பட்டு சகல உரிமைகளைப் பெறும் போதுதான் இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணமுடியும்.

இந்நாட்டில் அரசாங்கமும் புலிகள் இயக்கமும் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர். (செ)

## ஆசிரிய நூலகர் நேர்முகத் தேர்வு இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

ஆசிரிய நூலகர்களை தேர்ந்தெடுப்பதற்கான நேர்முகத் தேர்வு திட்டமிட்டபடி இன்று தொடக்கம் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்களுக்கு இன்று மு.ப 9.30 மணிக்கு யாழ்ப்பாண கல்வி வலயத்திலும்,

தீவக கல்வி வலயத்தை சேர்ந்தவர்களுக்கு நாளை சனிக்கிழமை மு. ப 9. 30 மணிக்கு யாழ்ப்பண கல்வி வலயத்திலும நேர்முகத் தேர்வு இடம் பெறும்

வடமராட்சி தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்களுக்கு 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு ப 9 30 மணிக்கு வடமராட்சி கல்வி வலயத்திலும்,

வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்களுக்கு 26 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப 9.30 மணிக்கு வலிகாமம் கல்வி வலயத்திலும் நேர்முகத் தேர்வு இடம் பெறும். (உ)

### உயிருள்ள புத்தகங்களை

# எழுதும் பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர் போற்றத்தக்கவரே

### உதவிக் கல்விப்பணிப்பாளர் தெரிவிப்பு

[யாழ்ப்பாணம்]

உயிரற்ற புத்தங்களை எழுதுவது இலக்கிய கர்த்தாக்களால் இலகுவாகிறது. ஆனால் மாணவர்களாகிய உயிருள்ள புத்தகங்களை எழுதுவது என்பது இலகுவானதல்ல. இவ்விடயத்தில் நம் வாழ்வை அர்ப்பணிக்கும் பாடசாலை ஆசிரியர்கள் நிச்சயம் போற்றப்பட வேண்டியவர்கள்.

யாழ். குட்டியப்புலம் அ. த. க. பாடசாலையில் அண்மையில் இடம்பெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டியில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வலிகாமம் வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரராஜா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் செ. கந்தசாமி தலைமையில் இடம் பெற்ற மேற்படி போட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

பின் தங்கிய பகுதியில் செயற்படும் இது போன்ற பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் திறமைகளை, ஆற்றல்களை இது போன்ற விளையாட்டுப் போட்டிகளின் போது அறிய முடிகிறது.

இப் பாடசாலை மாணவர்கள் மிகவும் திறமையான முறையில் தங்கள் ஆற்றல்களை வெளிப்படுத்தியமை போற்றற்குரியது என்றார்.

கல்லூரி அதிபர் தமது தலைமையுரையின் போது இப் பாடசாலைக்கு போக்குவரத்து பாதை இல்லாமல் உள்ளமை பாடசாலைவளர்ச்சிக்கு பெரும் தடையாக உள்ளது. மாணவர்கள், ஆசிரியர்கள் மிகுந்த சிரமத்தின் மத்தியிலேயே தமது கடமைக்கு வருகின்றனர்.

இது விடயம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்களிடம் உரிய விதத்தில் எடுத்துக் கூறப்பட்டது என்று கூறினார்.

விளையாட்டுக்குழு செயலரும் பாடசாலை உபஅதிபருமான பி. தர்மசீலன்நன்றியுரை நவின்றார். (க)

## கோப்பாயில் தொலைபேசி சேவை சீரில்லை

கோப்பாய்ப்பகுதிக்குஒழுங்சான தொலைபேசிச் சேவை இல்லையென அப்பகுதிப் பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கோப்பாய் பகுதி மக்கள் சீரான தொலைபேசிச் சேவையை நாடி கோண்டாவில் உடுவில், திருநெல்வேலிப் பகுதிகளுக்குச் செல்வதையும் அவதானிக்க முடிகிறது. (உ-79)

## விளையாட்டு போட்டி

(யாழ்ப்பாணம)

யாழ் கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி, மேற்படி வித்தியாலய புதிய மைதானத்தில் இன்று வெள்ளிக்கிழமை பி. ப, 2-00 மணிக்கு அதிபர் நா. சண்முகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-7)

## பனைவளம் ஒழிப்பு வடமராட்சியில் தீவிரம்

(செம்பியன்பற்று)

வடமராட்சியின் பல பாகங்களிலும் பனைமரங்கள் தறிக்கப்படுவது அதிகரித்து வருவதாகஅப்பகுதிமக்களால்புகார் தெரிவிக்சப்பட்டுள்ளது.

பல்வேறு தேவைகளின் பொருட்டும் பனை மரங்கள் தறித்துச் செல்லப்படுவதால் அப் பகுதியில் நீண்ட காலமாக ஓங்கி வளர்ந்திருந்த பனை வளம் அருகிவருகிறது.

இதேவேளை, இப்பிரதேச மக்களின் உணவுத்தேவையில் ஒரு பகுதியை பனை வளம் பூர்த்தி செய்து வருவதுடன் பொருளாதார வளத்திற்கு உற்றதுணையாகவும் விளங்குவது குறிப்பிடத்தக்கது. (உ-42)

### இராசி பலன்

23-02-2001
(மாசி 11, வெள்ளி)
அமாவாசை பி ப 2 06 வரை
சதயம் முழுவதும்
இராகுகாலம் 11.01- 12.31
சுபநேரம் 6.31- 8.01
சித்தம்.

**மேடம்**
தெய்வ தரிசனம், தொழிற் சிந்தை, தனலாபம், காரியம் கைகூடும்.

**இடபம்**
முயற்சி கைகூடும், அதிகாரம், பணியாளர் உதவி, தொழிற் சிறப்பு.

**மிதுனம்**
ஆன்றோர் ஆசி, பயந்த சுபாவம், முயற்சி தாமதம்.

**கடகம்**
வீண்தொல்லை, அகாலபோசனம், எதிர்பாராதபிரச்சினை, காரிய தடங்கல்.

**சிங்கம்**
அபூர்வ சந்திப்பு, போசன சுகம், வாகன வசதி, காரியம் கைகூடும்.

**கன்னி**
திடீர் பயணம், சந்தோஷம், காரிய அனுகூலம்.

**துலாம்**
வீண் தகராறு, குடும்ப நலம், தாழ்வுநிலை, முயற்சி தாமதம்.

**விருச்சிகம்**
மதிப்புக் குறைவு, காரிய தாமதம், பிரயாண தோல்வி முயற்சி தாமதம்.

**தனுசு**
பணவரவு, அந்நியர் சந்திப்பு, நேர்மை, காரிய வெற்றி.

**மகரம்**
பண விரயம், அன்பர் சந்திப்பு, காரிய தாமதம்.

**கும்பம்**
ஆன்றோர் ஆசி, சிந்தனை மிகுதி, உஷ்ணநிலை, முயற்சி கைகூடும்;

**மீனம்**
ஆலய வழிபாடு, அலைச்சல், வீண்விரயம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

### அமைச்சர் பிரதியமைச்சர்களின்

## மட்டுப்படுத்தப்பட்ட செலவுகள் உடன் அமுல்

[கொழும்பு]

வாகனங்களின் எரிபொருள் மற்றும் தொலைபேசிப் பயன்பாட்டை கட்டுப்படுத்துமாறு அமைச்சர்கள் பிரதியமைச்சர்கள் ஆகியோர்க்கு விடுத்த பணிப்பினை உடனடியாக அமுல் செய்யுமாறு ஜனாதிபதி வலியுறுத்திகூறியுள்ளார்.

இதற்கமைய அமைச்சர் ஒருவரின் தனிப்பட்ட பணியாளரின் எண்ணிக்கை 10 ஆகவும் பிரதி அமைச்சரின் தனிப்பட்ட பணியாளரின் எண்ணிக்கை10 ஆகவும்வரையறுக்கப்பட்டுள்ளது.

இதுவரை அமைச்சர்மற்றும் பிரதியமைச்சர்கள் 34 தனிப்பட்ட பணியாளர்களைப் பயன்படுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் அமைச்சர்கள் 8 வாகனங்களையும் பிரதியமைச்சர்கள் 5 வாகனங்களையும் மட்டுமே பாவிக்க முடியுமெனவும் ஏனையவற்றின் விபரங்களை நிதியமைச்சின் செயலருக்குஅறிவிக்கவேண்டுமெனவும்கேட்கப்பட்டுள்ளது.

தொலை பேசிகளின் எண்ணிக்கையும் 15 இற்கும் 20 இற்கும் இடையில மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. (உ-5)

## பருத்தித்துறை பலாலி ஆசிரிய கலாசாலை சிற்றூர்தி சேவை நிறுத்தம்

(செம்பியன்பற்று)

பலாலி ஆசிரிய கலாசாலைக்குப் பருத்தித்துறையில் இருந்து நடாத்தப்பட்டு வந்த தனியார் சிற்றூர்தி சேவை நிறுத்தப்பட்டுள்ளதனால், ஆசிரிய மாணவர்கள் பெரிதும் அவதியுறுவதனை அவதானிக்க முடிகிறது.

கடந்த வருடம் முழுவதும் அமுலில் இருந்த மேற்படி போக்குவரத்துச் சேவை, இவ்வருடத்தில் அதில் பயணிப்போர் தொகை குறைவாக உள்ளதனால், வருமானம் குறைவு எனும் காரணத்தினைக் காட்டி நிறுத்தப்பட்டுள்ளதாய் பதிக்கப்பட்ட ஆசிரிய மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது விடயத்தினைக் கருத்திற் கொண்டு சம்பந்தப்பட்ட தரப்புகள் தமது போக்குவரத்தினை இலகுவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆசிரிய மாணவர்கள் எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளனர். (உ-42)

## மீனவர் பிரச்சினை தொடர்பாக மாநாடு

### அமைச்சர் டக்ளஸ் தலைமையில்

(சுண்டுக்குளி)

வடபகுதி மீனவர்கள் அண்மைக் காலங்களில் எதிர்நோக்கிவரும் தொழில் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வுகாணவும் மீனவர்களதுவாழ்க்கைத்தரத்தை உயர்த்துவது தொடர்பாகவும் விசேட நடவடிக்கைகளை எடுக்க விரைவில் உயர்மட்ட மாநாடு ஒன்று நடத்தப்படவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அமைச்சர் தலைமையில் நடைபெறவுள்ள இம்மகாநாட்டில், மீன்பிடி நீரியல் வளத்துறை அமைச்சின் உயர் அதிகாரிகள், படை அதிகாரிகள், வடபகுதி அபிவிருத்திப் புனர்வாழ்வு புனரமைப்புடன் தொடர்புடைய உயர் அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இம்மாநாட்டில் கலந்துரையாடப்பட வேண்டிய முக்கிய விடயங்கள் பற்றி ஆலோசிப்பதற்காக இன்று குடாநாட்டில் உள்ள மீனவத் தொழில் சங்கங்களின் பிரதிநிதிகளை அமைச்சர் அழைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-110)

### கிறிஸ்தவ தேவாலயம்

## தாக்கப்பட்ட சம்பவம் சிஹல உறுமய தொடர்பு

(கொழும்பு)

பொலநறுவை மாவட்டத்தில் அண்மையில் இடம் பெற்ற கிறிஸ்தவ தேவாலயம் மீதான தாக்குதல் சம்பவத்துடன் சிஹல உறுமய கட்சியும் சம்பந்தப்பட்டுள்ளதாக சில தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிஹல உறுமய கட்சியுடன் தொடர்புடைய, சிரேஷ்ட மருத்துவ அதிகாரியே இந்த தாக்குதலுக்கு காரணம் என ஆலயப் போதகர் அலன் பிறேஸர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இத்தாக்குதல் தொடர்பாக உடனடி விசாரணைகளை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அவசர பணிப்புரை விடுத்துள்ளமைகுறிப்பிடத்தக்கது. உ-9

## தொழில்நுட்பஉதவியாளர் பயிற்சிநெறி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய கடற்றொழில் மற்றும்கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியில் முதல் முறையாக பெண்களுக்கு மீன் பிடித் தொழில் நுட்ப உதவியாளர் பயிற்சி நெறி எதிர் வரும் முதலாம் திகதியில் இருந்து ஆரம்பிக்கப் படவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் பங்கு பற்ற 54 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

இவர்களில் தெரிந்தெடுக்கப் படும் 20 பேருக்கு மட்டும் 45 நாள் பயிற்சிகொடுக்கப்படும் என்று மேற்படி கல்லூரியின் உதவி அதிபர் என் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார் (உ-110)

# பொது அறிவு வினாக்கள்

## இல- 45 தொகுப்பு: ரீ. மயூரன்

★ **பின்வருவன நடைபெற்ற ஆண்டுகளைத் தருக.**

1) இலங்கையில் துறைமுகம் நிறுவப்பட்ட ஆண்டு————
2) சோல்பரி ஆணைக்குழு அறிக்கைவெளியிட்ட ஆண்டு——
3) முதலாவது சனத்தொகை குடியெடுப்பு நடைபெற்ற ஆண்டு————
4) பிரான்ஸ் குடியரசான ஆண்டு————
5) உலகின் முதல்சோதனைக் குழாய் குழந்தை பிறந்தது————

★ **உலகில் பின்வருவன காணப்படும் நாடுகளைத் தருக·**

6) மிகப்பெரிய சிலை————
7) மிகப்பெரிய விமானநிலையம்————
8) தங்கம் அதிகம் விளைவது————
9) மியாமி கடற்கரை————
10) சாய்ந்த கோபுரம்————

★ **11–20 வரையான வினாக்களுக்கு தரப்பட்ட 4 விடைகளில் சரியானதை தெரிவுசெய்க.**

11) நோர்வேயின் நாணயமாவது
1) குறோன் 2) பெஸோ 3) பிராங் 4) ரூபா
12) கடல்மட்டத்திற்கு கீழேயுள்ள நாடாவது
1) ஜப்பான் 2) மாலைதீவு
3) நெதர்லாந்து 4) சிங்கப்பூர்
13) உலகிலேயே மழைவீழ்ச்சி கூடிய பிரதேசம்
1) ஹொன்ஷு 2) சிறாம்பூச்சி 3) சுஞ்மா 4) காபுல்
14) யாழ்ப் பறவை எங்குள்ளது?
1) பர்மா 2) பிலிப்பைன்ஸ்
3) நியுசிலாந்து 4) அவுஸ்திரேலியா
15) மின்சார பட்டறியை கண்டறிந்தவர்?
1) டன்லப் 2) வோல்றடா 3) டார்லி 4) டுரிங்
16) 1968 ஆம் ஆண்டு ஒலிம்பிக் நடைபெற்ற இடம்?
1) ரோம் 2) மெக்ஸிக்கோ
3) பெர்லின் 4) லண்டன்
17) ஈழத்தின் நாடக தந்தை எனப்படுபவர்?
1) சொர்ணலிங்கம் 2) வைரமுத்து
3) க. சிவராசா 4) க. ஜெகதீசன்
18) 'குறிஞ்சிப்பாட்டு' என்ற நூலை இயற்றியவர்?
1) நக்கீரர் 2) கபிலர்
3) ஒட்டக் கூத்தர் 4) இறையனார்
19) மறேடார்லிங் நதி உள்ள நாடு?
1) அமெரிக்கா 2) ஐரோப்பா
3) அவுஸ்திரேலியா 4) இந்தியா
20) முகம்மது நபி பிறந்த ஆண்டு?
1) கி.பி 596 2) கி.பி1596
3) கி.பி 425 4) கி.மு. 546

★ **பின்வரும் நாடுகளின் தேசிய தினம் எது?**

21) சீனா————
22) பின்லாந்து————
23) ஜப்பான்————
24) இத்தாலி————
25) சுவிற்சலாந்து————
26) மிகப்பெரிய இராணுவம் எந்த நாட்டில் உள்ளது?
27) பிரித்தானியாவின் முதற்பிரதமர்?
28) வெப்பத்தை அளவிடப்பயன்படும் உலக அலகு?
29) ஐக்கிய அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு நிலையத்தின் பெயர் என்ன?
30) செங்கடலின் சிவப்பு நிறத்திற்கு காரணம் யாது?

★ **பின்வருவனவற்றின் விரிவாக்கத்தினை தமிழில் எழுதுக.**

31) I.LO————
32) G.A T T————
33) PATA————
34) IDA————
35) IBRD————
36) பட்டம் விடும் கலையில் புகழ் பெற்ற நாடு?
37) ஒலிம்பிக் பிரதான காரியாலயம் எங்குள்ளது?
38) கிரிக்கெட் பந்தின் பாரம் எவ்வளவு?
39) 1948 ஆம் ஆண்டு ஒலிம்பிக் நடைபெற்ற இடம்?
40) ரேபிள் ரெனிஸை ஆரம்பத்தில் எவ்வாறு அழைத்தார்கள்?

**குறிப்பு:-**
விடைகளை வேறு தாளில் எழுதி அனுப்பவும். இதற்கான விடைகளை 01-03-2001 இற்கு முன் எமக்கு கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

**அறிவியல் பகுதி**
**வினா இல: 45**
"வலம்புரி"
இல: 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ..........................
சொந்த முகவரி: ..........................
கற்கும் பாடசாலை : ..........................
மாணவர் கையொப்பம் : ..........................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்.

## பொது அறிவு வினா இல·44 விடைகள்

1) 1857
2) 1801
3) 1505
4) கி.பி. 4
5) கி.மு. 221
6) ஒட்டாவ
7) ஜெருசலேம்
8) பீககிங்
9) பேன்
10) பக்தாக்
11) பேடன்பவுல்
12) தியோட்லைற்
13) செயிஸ் மோகிராப்
14) மு. கதிரவேற்பிள்ளை
15) நெபுகத் நெசார்
16) யுரேனியம்
17) பாதரசம்
18) விலர்மிடவ் ரெமிதேவ்
19) கியுலெக்ஸ்
20) பி
21) சலவைச்சோடா
22) பார்த்லோமோ மான் பிரிடி
23) 1979
24) 1978
25) செவ்வாய்
26) புளுட்டோ
27) பிளையர்-1
28) ஆங்கிலநாடக எழுத்துத்துறை
29) ஒல்லாந்தர்
30) சுவிஸ்லாந்து
31) ஐரோப்பிய பொருளாதார சமூகம்
32) சர்வதேச நிதிக்கூட்டுத்தாபனம்
33) சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம்
34) சர்வதேச நாணய நிதி
35) ஆசிய அபிவிருத்திவங்கி
36) மேற்கிந்திய தீவுகள்
37) கென்யா
38) உருகுவே
39) 3 அடி
40) 1919

## வினா இல-44

**அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர்விபரம்**

★ தி. மஞ்சுளா கோப்பாய் வடக்கு கோப்பாய்
★ ஜெ மயூரன் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி
★ சிவகுமாரன் சயந்தன் அரசடி வீதி, வட்டுக்கோட்டை தெற்கு
★ சண்முகவடிவு டயானந் யாழ் மத்தியகல்லூரி
★ சிவராஜா றுஷாந் யாழ். பரியோவான் கல்லூரி
★ ஆ யோகினி நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி
★ இ. றாஜ்குமார் வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்

## மாதாந்த உதவிப்பணம்

(மந்திகை)
கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் உதவிப்பணம் பெறுவோருக்கான மாசிமாத கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.
பொதுசன மாதாந்த உதவிப்பணம், புற்றுநோய், கசநோய் ஆகியவற்றுக்கான கொடுப்பனவுகளை பெறுவோர் அந்தந்தப் பகுதியிலுள்ள தபால், உபதபால் அலுவலகங்களில் எதிர்வரும் 25ம் திகதிக்கு முன்பு பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-23)

## ச.ச. நிலையம் செயற்படுகிறது

(நல்லூர்)
நீண்ட காலமாக செயற்பாடுகள் எதுவுமின்றியிருந்த நல்லூர் மக்கள் சனசமூக நிலையம் மீண்டும் தனது பணிகளை புதிய உத்வேகத்துடன் ஆரம்பித்துள்ளது
இதே வேளை, முழு நிலாக் கருத்தரங்குகள், மற்றும் பாலர் பாடசாலை என்பன நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. [உ-4]

## விதவைகளுக்கு தையல் இயந்திரம் வழங்கல்

[மண்டைதீவு]
தீவகப் பகுதியில் உழைப்பாளரை இழந்த குடும்பத் தலைவிகளுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளன.
இதற்கான தையல் இயந்திரங்கள் 'ரான்' நிறுவனத்தின் நிதியுதவி மூலம் கொள்வனவு செய்யப்பட்டன.
இதன் முதற்கட்டமாக ஆறு தையல் இயந்திரங்கள் விதவைகளுக்கு வழங்கப்படவுள்ளதாக தீவகம்தெற்கு பிரதேச சபைத் தலைவர் ந. கருணாகரகுருமூர்த்தி தெரிவித்துள்ளார். (செ-11)

## பேருந்தில் கிளைமோர் கண்ணிவெடி மீட்பு

(கொழும்பு)
கடந்த 20ஆம் திகதி மாலை நான்கு மணியளவில் முருங்கனில் இருந்து வவுனியா நோக்கிச் சென்று கொண்டிருந்த போக்குவரத்துச் சபைக்குரிய பேருந்தில் கிளைமோர் கண்ணிவெடி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு அகற்றப்பட்டது.
பேருந்தின் சாரதியும், நடத்துநரும் விசாரணைகளுக்காக பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (உ-9)

## நயினாதீவில் செப்பனிட்ட வீதிகள் சேதமுற்றுள்ளன

(ஊர்காவற்றுறை)
நயினாதீவில் அண்மையில் திருத்தஞ் செய்யப்பட்ட பல வீதிகள் பொதுமக்கள் பயணம் மேற்கொள்ள முடியாத அளவிற்கு சேதமுற்றுக் காணப்படுகின்றன.
நயினாதீவு வங்களாவடிப் பாலத்திற்குச் செல்லும் வீதியும் இவ்வாறு சேதமுற்று இருப்பதினால் பொது மக்கள் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.
செப்பனிடப்பட்ட வீதிகளில் ஒழுங்காக உருளையினால் கற்கள் அமத்தப் படாமையால் கற்கள் மேல் எழுந்து வீதிகள் குன்றுங்குழியுமாகக் காணப்படுவதையும் அவதானிக்க முடிகிறது. (செ-75)

## அனலைதீவு மாணவரின் கல்விநிலை பின்னடைவு பெற்றோர் கவலை

[ஊர்காவற்றுறை]
அனலைதீவுப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களில் தொண்ணூறு சதவீதமானோர் தொண்டர் ஆசிரியர்கள் என்றும்; இதனால் மாணவர்களின் கல்வி நிலை பின்னடைவதாகவும் பெற்றோர்களினால் கவலை தெரிவிக்கப்படுகின்றது.
அனலைதீவு வடலூர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, அனலைதீவு தெற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகளில் அதிபர், ஒரு ஆசிரியர் தவிர ஏனையோர் தொண்டர் ஆசிரியர்கள்
இது குறித்து தீவக கல்வி வலயம் பாராமுகமாக இருப்பது குறித்து பெற்றோர்கள் மத்தியில் அதிருப்தி நிலவுகின்றது. (செ-75)

## காணாமல் போன மாணவி சடலமாக மீட்பு

[கொழும்பு]
பாடசாலைக்குச் சென்ற மாணவியொருவர் கடந்த திங்கட்கிழமை சடலமாக மீட்கப்பட்ட பரிதாபகரமான சம்பவம் மலையகப் பகுதியில் மெறவாக்கை எனும் இடத்தில் நிகழ்ந்துள்ளது.
கடந்த 15 ஆம் திகதி வீட்டிலிருந்து பாடசாலைக்கு சென்று காணவில்லை என தேடப்பட்டு வந்த தமிழ் மாணவியான விஜயலக்சுமி என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
பிரஸ்தாப மாணவியை கடத்திச் சென்று பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி கொலை செய்திருக்கலாமென்றுபொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (உ-இ)

## பேருந்தில் இருந்து விழுந்த வைத்தியசாலை ஊழியர் அவசர சிகிச்சைப்பிரிவில்

(யாழ்ப்பாணம்)
வேகமாய் வந்த பேருந்தினை திடீரெனநிறுத்தியதால் அதில் பயணம் செய்த வைத்தியசாலைப் பெண் ஊழியர் வீதியில் தூக்கி விசப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் பூநாறி மரத்தடியில் இடம் பெற்றுள்ளது.
வீதியில் விழுந்த யாழ். போதனா வைத்தியசாலை பெண் ஊழியர் தலையில் பலமான உட்காயங்களுக்கு உட்பட்ட நிலையில் மேற்படி வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
இதேசமயம், கடமையின் நிமித்தம் சென்று கொண்டிருந்த வேளையிலேயே இச் சம்பவம் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (உ-12)

## பாடசாலை உபகரணம்

(மந்துவில்)
தென்மராட்சி வலயத்தைச் சேர்ந்த ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு யுனிசெவ் நிறுவனம் பாடசாலை உபகரணங்களை வழங்கியுள்ளது. (உ-39)

## இன்று ஒரு தகவல்

# ஆசையற்றோர் அஞ்சார்

சேரளத்தில் நாராயண பிராந்தன் என்ற ஒரு பக்தர் வாழ்ந்து வந்தார். பிராந்தன் என்ற சொல்லுக்குப் பித்தன் என்பது பொருள். நாராயண பிராந்தன் பார்ப்பவர்களுக்கு ஒரு பைத்தியக் காரனைப் போலவே தென் பட்டார். சுடுகாட்டையே அவர் தமது இருப்பிடமாகக் கொண்டு அங்கேயே வசித்தார். பிணங்கள் எரிந்து கொண்டிருக்கும் இடத்தில் அமர்ந்து அவர் ஆழ்ந்த தியானத்தில் இருப்பார்.

ஒரு நாள் இரவு பிராந்தன் வழக்கம் போல் மயானத்தில் இருந்தார் அப்போது மயான தேவதையின் தோழிகள் அங்கே வந்தார்கள். அவர்கள் 'எங்கள் தலைவி இன்று இரவு இந்தச் சுடுகாட்டுக்கு வரப் போகிறாள். அவள் பயங்கரமான வடிவங் கொண்டவள். ஆகவே இந்தஇடத்தைவிட்டு ஓடிப் போய் விடு' என்று சொல்லிப் பிராந்தனை எச்சரித்தார்கள். ஆனால் பிராந்தன் சிறிதும் அச்சமின்றி யார் வேண்டுமானாலும் வரட்டும். நான் இந்த இடத்தை விட்டு நகர முடியாது' என்று பதில் கூறிவிட்டு அங்கேயே அசையாமல் அமர்ந்து கொண்டார்.

நள்ளிரவு வந்தது மயான தேவதையான காளிதேவி அண்டங்களெல்லாம் கிடுகிடு வென்று அதிரும்படியான ஆர்ப்பாட்டங்களுடன் அங்கே தோன்றினாள். நாராயண பிராந்தன் முன்னிலையில், அவரைப் பயப்படுத்துவதற்காகத் தன் ஆற்றலை எல்லாம் திரட்டி ஆரவாரம் செய்தாள். காளிதேவியின் ஆரவாரம் காரணமாக அண்டங்களெல்லாம் அசைந்து ஆட்டங் கண்டன. ஆனால் பிராந்தனோ சிறிது கூடப் பயமின்றிக் காளிதேவியின் எல்லா ஆர்ப்பாட்டங்களையும் அமைதியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். தேவியின் எல்லா ஆட்டங்களும் முடிந்த பிறகு அவளைப் பார்த்து பிராந்தன் 'இது தானா உன் பொம்மலாட்டம்? இன்னும் இருக்கிறதா?' என்று வினவினார்.

பிராந்தனின் அச்சமின்மையைக் கண்டு தேவிக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று. எனவே அவருக்கு ஒரு வரம் கொடுக்க விரும்பிய தேவி 'உனக்குத் தேவையான வரத்தை என்னிடமிருந்து பெற்றுக்கொள்' என்று பிராந்தனிடம் கூறினாள். அதைத் தொடர்ந்து அவர்களுக்கிடையில் உரையாடல் நடைபெற்றது. பிராந்தன் 'தேவி எனக்கு எந்த வரமும் வேண்டியதில்லை' என்றார் காளி தேவி 'நான் யாருக்குத் தரிசனம் கொடுக்கிறேனோ அவர்களுக்கு ஒரு வரம் கொடுத்தே ஆகவேண்டும். ஆகையால், உனக்கு இஷ்டமான வரத்தைத் தயங்காமல் கேள்' என்றாள். பிராந்தன், 'அப்படியானால் என் இடக்காலில் உள்ள வீக்கத்தை வலக்காலுக்கு மாற்றிக் கொடு' என்றார்.

காளி தேவி' அது இயலாத காரியம் ஆகவே வேறு ஏதாவது கேள்' என்றாள் பிராந்தன் 'எனக்கு வேறு எதுவும் வேண்டியதில்லை தாயே! நீ வந்த வழியே செல்வாயாக' என்றார் ஆசை அற்றவர்களுக்கு அச்சம் இல்லை. எந்த சக்தியும் அவர்களை எதுவும் செய்ய முடிவதில்லை என்பது இந்தக் கதையின் மூலம் விளங்குகிறது.

நன்றி

தெய்வீகக் கதைகள்

# புலிகளைத் தடைசெய்யக் கூடாது ஆதரவளித்த ஐ.தே.க. உறுப்பினர் மீது சிஹல உறுமய வழக்குத்தாக்கல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளை பிரித்தானிய அரசாங்கம் தடைசெய்யக் கூடாதென்று கோரிய பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது, வழக்குத் தாக்கல் செய்யப் போவதாக சிஹல உறுமய செயலாளர் திலக் கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் சிங்கள மக்களுக்கு துரோகம் இழைக்கும் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவர் பிரித்தானிய அரசிடம் விடுதலைப் புலிகளை தடை செய்ய வேண்டாமென்று கோரியுள்ளனர்.

இக் கோரிக்கை 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பு நிலையியல் கட்டளைகளை மீறியிருக்கின்றது எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை விடுதலைப் புலிகளை தடை செய்ய வேண்டுமென்பதை வலியுறுத்தி கையெழுத்து சேகரிக்கும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்கள் தமது மகஜரில் கையொப்பமிட்டனரென்று சிஹல உறுமயவின் தேசிய அமைப்பாளர் தம்மிக ரணலக தெரிவித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். [உ-இ]

## கடை உடைத்து திருட்டு

[யாழ்ப்பாணம்]

உடுவில் தெற்கு புளியடி ஞானவைரவர் கோவில் பகுதியில் உள்ள கடை ஒன்று நேற்று முன்தினம் அதிகாலை வேளை உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருட்கள் களவாடிச் செல்லப்பட்டுள்ளன.

இதுபோன்ற திருட்டுச் சம்பவங்கள் அப்பகுதியில் அடிக்கடி நிகழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. (உ-9)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம)

யாழ்ப்பாணம் புனித மரியாள் வித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று அதிபர் ம: செபஸ்ரியாம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.வி. குகேந்திரன் (ஜெகன்) பிரதம விருந்தினராகவும், ஈ.பி டி பியின் யாழ்மாவட்ட பிரதி அமைப்பாளர் க மணி பல்லவராஜன், யாழ் கோட்டக்கல்வி அதிகாரி ஆ.இராஜகோபால் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்கிறார்கள்.

(செ.இ)

## 26 மில்லியன் டொலர் நிதியுதவி

(கொழும்பு)

காலிமாவட்டத்தில் நீர் விநியோகத்திற்கென திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்காக தென்கொரியா 26 மில்லியன் டொலர்களை இலங்கைக்கு கடனாக வழங்க முன்வந்துள்ளது. (உ-5)

## கண்ணி வெடிகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

அரியாலை, தனங்கிளப்புப் பகுதிகளில் புதைத்து வைக்கப்பட்டிருந்த 32 நிலக் கண்ணி வெடிகள் கடந்த ஞாயிறன்று படையினரால் அகற்றப்பட்டதாக ஊடகத் தகவல் மையம் அறிவித்துள்ளது. (உ-9)

## பாம்பு தீண்டியது

(யாழ்ப்பாணம்)

வீதியால் சென்ற வேளை பாம்பு தீண்டிய ஒருவர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நெடுந்தீவைச் சேர்ந்த இ. காண்டீபன் (வயது 20) என்பவரையே இரவு நேரம் பாம்பு தீண்டியது. (உ-6)

## புலிகள் மீது தாக்கியமை சமாதான முயற்சியில் ஒரு கறுப்புப்புள்ளி

[கொழும்பு]

சர்வமதக் குழுவினருடன் பேச்சு வார்த்தை நடத்திய விடுதலைப்புலிகள் மீது படையினர் தாக்குதல் மேற்கொண்டமை சமாதான முயற்சியில் ஒரு கறுப்புப் புள்ளியாகும்.

இவ்வாறு மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஆண்டகை தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் மீது படையினர் இவ்வாறு தாக்குதல் நடத்தியமை சமாதான முயற்சிக்குப் பாதகம் விளைவிக்கும் நடவடிக்கையாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். [செ]

## வைத்தியசாலை ஊழியர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள்

(மந்திகை)

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை ஊழியர்களுக்கு கட்டைவேலி நெல்லியடி பல நோக்கு கூட்டுறவு சங்கம் கடனடிப்படையில் 30 துவிச்சக்கர வண்டிகளை வழங்கியுள்ளது.

வைத்தியசாலை அபிவிருத்திச்சபையின் தலைவர் டாக்டர் கே. மயிலேறும் பெருமாளின் முயற்சியின் பேரில் இவ் உதவி வழங்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் கடமையாற்றும் பெண் ஊழியர்கள் 15 பேருக்கும் ஆண் ஊழியர்கள் 15 பேருக்குமே இவ்வாறு துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. உ-23)

## சமுர்த்தி உதவு தொகை அதிகரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

சமுர்த்தி நிவாரண உதவி பெறும் குடும்பங்களுக்கான நிவாரணத் தொகையை மேலும் இரண்டாயிரம் ரூபாவால் அதிகரித்து வழங்குவதென அமைச்சர் எஸ். பி. திஸநாயக்கா உறுதியளித்துள்ளார்.

நாடு முழுவதும் சுமார் இரண்டு மில்லியன் சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்கள் வாழ்கின்றனர்.

இவர்களுடைய வருமானத்தை சராசரியாக 4 ஆயிரம் தொடக்கம் 5 ஆயிரம் ரூபாவரை அதிகரிக்கவே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதேவேளை இரண்டாயிரம் ரூபா சமுர்த்திக் கொடுப்பனவு உதவி, சுமார் ஒரு மில்லியன் குடும்பங்களுக்கு பரீட்சார்த்தமாக விரைவில் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-இ)

## அரசினர் ஆஸ்பத்திரிகளில் தாதிமார் வெற்றிடம்

(கொழும்பு)

இலங்கை பூராகவுமுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் 14 ஆயிரம் தாதிமார்களுக்கு வெற்றிடம் உள்ளதா சுகாதார அமைச்சர் செனவிரட்ண தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் பணியாற்ற 30 ஆயிரம் தாதிமார்கள் தேவையாகஉள்ள போதிலும் 16 ஆயிரம் தாதிமார்களே கடமையில் உள்ளதாகவும் சுகாதார அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

(செ)

# 4 நாட்கள் நடைபெற்ற மெய்வன்மை பயிற்சிமுகாம்

[சுண்டுக்குளி]

விளையாட்டு அமைச்சினால் யாழ் வை. எம். சி இன் அனுசரணையுடன் மெய் வல்லுனர் பயிற்றுனர்களுக்கான பயிற்சி முகாம் கடந்த 16, 17, 18, 19 ஆம் திகதிகளில் வை. எம். சி.ஏ.விளையாட்டு அரங்கில் காலை 7.00 மணி தொடக்கம் இரவு 9.00 மணிவரை யாழ் மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரி திருமதி எ. எப். ஜே. ரூபசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இப் பயிற்சி முகாமில் பாடசாலை ஆசிரியர்கள், உடற்கல்வி திணைக்கள பயிலுனர்கள், மெய்வல்லுநர் சங்கப் பிரதிநிதிகள் உட்பட 40 பேர் கலந்து கொண்டனர்.

திருமலையிலிருந்து வந்தவடக்கு கிழக்கு விளையாட்டுத் துறை உதவி பணிப்பாளர் கே. டபிள்யு. விமலராஜன் வடக்கு கிழக்கு மாகாண விளையாட்டுத் துறை திட்டமிடல் அலுவலர் ஆர். ஆர் றோகான் ராஜசிங்கம் ஆகியோர் இச் செய்முறைகளையும் நடத்தினார்:

பலவருட இடைவெளியின் பின் இவ்விதமான பயிற்சி பாசறை ஒன்று இங்கு நடைபெற்றது குறிப்பிடத்தக்கது:

(உ-110)

# சிஹல உறுமயவையும் தடை செய்ய வேண்டும் -ஜே. வி. பி-

[கொழும்பு]

விடுதலைப்புலிகளுடன் சேர்த்து சிஹல உறுமயவையும் தடைசெய்ய வேண்டும் என ஜே. வி. பி. விருப்பம் தெரிவித்துள்ளது.

நாட்டைப்பிரிக்க நினைப்பவர்களை மாத்திரமல்ல, சிங்களபேரினவாத அமைப்பான சிஹல உறுமயவையும் தடைசெய்யவேண்டும் என எமது நிலைப்பாட்டை நாம் ஏற்கனவே அறிவித்து இருந்தோம்.

ஆகையால், புலிகள் இயக்கத்தை தடைசெய்யவேண்டும் என சிஹல உறுமய நடத்திய கையெழுத்து வேட்டையில் நாம் கையெழுத்திடவில்லை. அதற்கான அவசியமும் எமக்கில்லை. எனவும் ஜே. வி. பி. கட்சியின் எம். பி. யான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். [செ)

## மின்னல் தாக்கி பெண்கள் பலி

(கொழும்பு)

களனிவெல்லேகலப்பகுதியில் உள்ளவீடொன்றின் மீது மின்னல் தாக்கியதில் வீட்டில் இருந்த நால்வரில் இருவர் உயிரிழந்துள்ள தோடுஇருவர் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை இச்சம்பவத்தின் போது உயிரிழந்துள்ள இருவரும் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது: (உ-4)

# அனலைதீவு, எழுவைதீவு படகுச்சேவை ஒழுங்கீனம் பயணிகள் பரிதவிப்பு

(ஊர்காவற்றுறை)

அனலைதீவு, எழுவைதீவு ஆகிய இடங்களுக்குக் குறித்த நேரத்தில் படகுச் சேவை இடம் பெறாமையால் பயணிகள் பெரும் கஸ்டங்களை எதிர்நோக்குகின்றார்கள்.

மேற்படி இடங்களுக்கு இரண்டு தனியார் படகுகள் மாத்திரமே சேவையில் ஈடுபடுகின்றன. அதுவும் குறித்த நேரத்திற்கு பயணிகளை ஏற்றிச் செல்லாமையால் பயணிகள் பரிதவிக்கின்றனர்.

இதேவேளை ஊர்காவற்றுறையில் இருந்து மேற்படி இடங்களுக்குச் செல்லும் படகும் மாலை நேரங்களில் மாத்திரம் சேவையில் ஈடுபடுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

(செ-75)

## எலிகளால் தொல்லை

# எலிஸபெத் மகாராணி திண்டாட்டம்

[லண்டன்]

எலிகளின் தொல்லையால் எலிஸபெத் மகாராணி இடம் மாறும் நிலைஏற்பட்டுள்ளது.

மகாராணி வசித்து வரும் பக்கிங்ஹாம் மாளிகையின் சமையல் கூடத்தில்சுண்டெலிகள் பல்கிப் பெருகியுள்ளதுடன், பெரும் நாசம் விளைவித்தும் வருகின்றன.

இதனையடுத்து, அரண்மனை அதிகாரிகள், நிபுணர்கள் ஆகியோரை அழைத்து ஒரு வாரத்தில் சுண்டெலிகளை ஒழித்துக் கட்ட வேண்டும் இல்லையேல் சமையல் அறை மூடப்பட வேண்டும் என கடும் உத்தரவு பிறப்பித்திருப்பதாய் தெரியவந்துள்ளது. [உ-7]

## இரட்டைப் பிரஜாவுரிமைக்கு

# எதிராக சிம்பாவேயில் இறுக்கமான நடைமுறை

(ஹராரே)

இரட்டைப் பிரஜாவுரிமை உள்ளோர்க்கு எதிரான சட்டங்களை மேலும் இறுக்கமடையச் செய்யப்போவதாக சிம்பாவே அரசு அறிவித்துள்ளது.

இந்த வகையில் சிம்பாவே பிரஜைகள் வெளிநாடுகளில் தங்கியிருக்க அனுமதி அளித்த காலத்தை சிம்பாவே அரசு 7 வருடங்களில் இருந்து 5 வருடங்களாக குறைக்கவுள்ளது.

இரட்டைப் பிரஜாவுரிமை அரசை கவிழ்ப்பதற்கு வழி செய்யக் கூடாது என்பதற்காகவே இம் முடிவு எடுக்கப்பட்டதாக அரசு அறிவித்துள்ளது.

இதன் மூலம் சிம்பாவேயிலிருக்கும் வெள்ளை இனத்தவர்களே அதிகளவில் பாதிக்கப் படுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-9)

# பிரிவினைவாதிக்கு தண்டனை நீடிப்பு

(டாக்கா)

ஆறு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட இந்தியப் பிரிவினைவாதத் தலைவர் ஒருவருக்கு மேலும் 3 ஆண்டுகள் சிறைத் தண்டனையை பங்களாதேஷ் அரசு வழங்கியுள்ளது.

1997ஆம் ஆண்டு பிரிவினைவாத தலைவரான 47 வயதுடைய செடியாவுக்கும் அவரது இரு சகாக்களுக்கும் போலி விசாவுடன் பங்களாதேஷ் சென்று அங்கு தங்கி இருந்தமைக்கான 6ஆண்டு சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

பிரிவினைவாதத் தலைவர் போலி நோட்டுகளைக் வைத்திருந்த குற்றம் நிரூபிக்கப் பட்டமையை அடுத்தே தண்டனை நீடிப்பு இடம்பெற்றுள்ளது.

மேற்படி மூவரையும் தன்னிடம் கையளிக்குமாறு இந்தியா கேட்டிருந்த போதும் நாடு கடத்தும் உடன்படிக்கை இல்லாத காரணத்தால் பங்களாதேஷ் அதற்கு மறுப்புத் தெரிவித்தமை குறிப்பிடத் தக்கது. (உ-09)

## அரசியல் வாதிகளின்

# நடவடிக்கைகள் பற்றிய வீடியோ நாடாவுக்கு தடை

(லிமா)

பெருநாட்டின் புழக்கத்தில் இருக்கும் அரசியல்வாதிகளின் பாரிய நடவடிக்கைகள் தொடர்பான வீடியோ நாடாக்களை தடைசெய்யுமாறு அந்நாட்டின் றோமன் கத்தோலிக்க திருச்சபை கேட்டுள்ளது.

முன்னாள் பெரு ஜனாதிபதி அல்பாட்ட பீஜி மோரியின் ஆட்சிக்காலத்தில் அவருடைய ஆதரவு உளவுப் பிரிவினர் இவ்வீடியோ, நாடாக்களைப் பதிவு செய்துள்ளனர்.

பீஜி மோரியின் ஆட்சிகவிழ்க்கப்பட்ட இவை பொது மக்கள் மத்தியில் திரையிடப் பட்டு வருகின்றன. (உ-7)

# பயணக் கைதிகள் விடுதலை முயற்சி பலிதமாகவில்லை

டாக்கா)

பங்களாதேஷின் தென்கிழக்குப் பக்கமாக உள்ள மலையடிவாரப் பகுதியில் இரண்டு வெளி நாட்டவரை பயணக்கைதிகளாகப் பிடித்து வைத்திருக்கும் ஆட்கடத்தல் காரர்களுடன், அரசமத்தியஸ்தர்கள் பேச எடுத்த முயற்சி பலன் தரவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது:

தாம் இப்போதுபேசவிரும்பவில்லை என கடத்தல் காரர்கள் அரச அதிகாரிகளை திருப்பி அனுப்பிவிட்டதாகவும் அவ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து பயணக் கைதிகளுக்குத் தேவையான உணவு, உடை, நுளம்பு வலைகள் என்பவை மத்தியஸ்தர்கள் ஊடாக ஆட்கடத்தல் காரர்களிடம் சேர்ப்பிக்கப்பட்டுள்ளது. (உ-9)

## கொங்கோவில்

# சண்டை நிறுத்தம் குறித்து பேச 6 நாள் கூட்டம்

(கின்ஷாஸா)

கொங்கோ ஜனநாயக குடியரசில் ஆறு நாட்டு அமைச்சர்களுடனான பொதுக் கூட்டம் ஒன்றினை, ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை கடந்த புதனன்று ஆரம்பித்துள்ளது.

கொங்கோவில்நடைபெற்று வரும் சண்டைகளை நிறுத்துவது தொடர்பாகவும் கொங்கோவில் உள்ள போராளிக் குழுக்களின் தாக்குதல்களை நிறுத்த அங்கு ஐ நா. அமைதிப் படையை நிறுத்துவது குறித்தும் இப்பொதுக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது. (உ-9)

# பி.பி.சி. செய்தியாளர் வெளியேற்றம்

# சிம்பாவே மீது பிரி. அமைச்சர் சீற்றம்

[லண்டன்]

அண்மையில் சிம்பாவே அரசு அங்கிருந்த பி.பி.சி செய்தியாளரை உடனடியாக வெளியேறுமாறு பணித்ததை பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் பிறையன் வில்சன் வன்மையாக கண்டித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது, சிம்பாவேயில் ஊடகவியலாளர்கள் நடத்தப்படும் விதம் குறித்து பிரிட்டன் மட்டுமல்லாமல் முழு உலகும் கவலை தெரிவித்துள்ளது,

அத்துடன் இது குறித்து ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளுமாறும் அவர் சிம்பாவேயிலுள்ள பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகளுக்கு கூறியுள்ளார். [உ-9]

# வன்செயல்களை தடுக்க நேட்டோவுக்கு அழைப்பு

## யூகோஸ்லாவாக்கியா விடுத்தது

(பெல்கிறேட்)

கொசோவோவில் வன்செயல்களைத் தடுக்க நேட்டோ அமைப்பு நடவடிக்கை எடுக்க வேண்டுமென யூகோஸ்லாவியா கோரிக்கை விடுத்துள்ளது.

கொசோலோவில் கடந்த வாரம் இடம்பெற்ற பஸ் குண்டுவெடிப்பில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 10 ஆக உயர்ந்ததை அடுத்து மேற்படித்தாக்குதல்களை தீவிரவாத போக்குடைய அல்பேனியர்களே மேற்கொண்டுள்ளதாக யூகோஸ்லாவியா குற்றம்சாட்டியுள்ள அதே வேளை அல்போனியர்கள் மீது நேட்டோ நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கேட்டுள்ளது.

கொசோவோ 1999 ஆம் ஆண்டில் ஐ நா வின் தீவிர கண்காணிப்பின்கீழ் வந்தபின் கடந்தவாரம் இடம்பெற்ற பஸ் குண்டுவெடிப்பே மிக மோசமானது என்பது குறிப்பிடத்தக்கது. (உ-9)

# இந்தியா மறுப்பு

(மொஸ்கோ)

அணுசக்திக்குரிய அணுப் பொருளை ரஷ்யாவிலிருந்து சர்வதேச பாதுகாப்பு தரங்களுக்கு அமையவே இறக்குமதி செய்ததாக இந்தியா அறிவித்துள்ளது.

இதுகுறித்து ஐக்கிய அமெரிக்கா கண்டனத்தை வெளியிட்டுள்ளதையும் இந்தியா மறுத்துள்ளது. (செ)

# ஜம்மு காஷ்மீரில் ஒருதலைப்பட்ச சண்டை நிறுத்தம் மேலும் நீடிப்பு

[புதுடில்லி]

ஜம்முகாஷ்மீரில் மே மாதம் வரை சண்டை நிறுத்தம் நீடிக்கப்பட்டிருக்கிறது:

சண்டை நிறுத்தத்தின் போது தீவிரவாதிகள் வன்முறையில் ஈடுபட்டால் பாதுகாப்புப் படையினர் தகுந்த பதிலடி கொடுப்பார்கள் என்று பிரதமர் அடல் பிஹாரி வாச்பாய் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் யுத்த நிறுத்த நீடிப்பு தொடர்பா பிரதமர் வாஜ்பாய் தலைமையில் இடம்பெற்ற மாநாட்டில் இத்தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

இதே சமயம், இது 3 ஆம் கட்ட ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்த நீடிப்பு என்பது குறிப்பிடத்தக்கது. [உ-7]

# பிரபலஓவியர் காலமானார்

(பரிஸ்)

20 ஆம் நூற்றாண்டின் உலகின் தலை சிறந்த ஓவியருள் ஒருவரான பிரெஞ் நாட்டைச் சேர்ந்த பால்தஸ் தனது 92 வயதில் கடந்த ஞாயிறன்று காலமானார்; [உ-9]

## செய்திப்பரல்

★ கொசோவோவில் பொலிஸ் வாகனமொன்று கண்ணிவெடியில் சிக்கியதில் 2 சேர்பிய பொலிஸார் உயிரிழந்துள்ளார்கள்.

★ ஜப்பானிய பிரதமர் ஜெஷிரோ மொரிக்கான ஆதரவு மக்கள் மத்தியில் வெகுவாக குறைந்து வருவதாக கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன.

★ சிம்பாவேயை விட்டு ஊடகவியலாளர்கள வெளியேறுவதற்கான காலக்கெடு நீடிக்கப் பட்டுள்ளதாக அந் நாட்டு உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

★ ஆப்கான் அகதி முகாமில் உள்ளவர்களுக்கு போதிய இடவசதி, மருத்துவ, உணவுவசதி என்பன இல்லையெனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

★ காஷ் மீரில் முஸ்லிம்கள் பலர் அண்மையில் பொலிஸாரால் கொல்லப்பட்டதை எதிர்த்து அம்மாநிலப் பெண்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (உ-9)

# எதிர்வரும் தேர்தலில் பிரி. பிரதமர் பிளேயரே

## கார்டியன்பத்திரிகைஆருடம்

(லண்டன்)

இங்கிலாந்தில் பிரதமர் ரொனி பிளேயரின் செல்வாக்கு அதிகரித்து வருவதாகவும் எதிர்வரும் பொதுத்தேர்தலில் மீண்டும் அவரைப் பிரதமராக தேர்ந்தெடுக்கக் கூடிய வாய்ப்பு அதிகரித்துள்ளதாகவும் அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்று தெரிவிக்கின்றது.

கார்டியன் பத்திரிகை நடத்திய இக்கணிப்பின் பிரகாரம் தற்போதைய பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் கன்சர்வேட்டிவ் கட்சியினரைவிட 15 புள்ளிகளை அதிகமாக கொண்டிருப்பதாகவும் சென்ற மாத நிலைமையைவிட இது 5 வீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இங்கிலாந்தின் பொருளாதாரம் நல்ல நிலையில் இருக்கும் இவ்வேளையில். தேர்தலை நடத்துவதன் மூலம் பிளேயர் இரண்டாவது முறையும் பெரும் வெற்றியைப் பெறுவாரென கார்டியன் பத்திரிகை மேலும் கூறியுள்ளது. (உ-9)

## உலக தரிசன அறிவுப் போட்டி இல - 7

முழுப் பெயர்; ..............................—..............................—

முகவரி; ..............................

...... — — — — — — — — — — — —

பிறந்த திகதி: — — — — — — — — — —

போட்டியாளர் கையொப்பம் — — — — — — — — — — —

பெற்ற புள்ளிகள்: — — — — — — —

இருபுனலும் வாய்ந்த
மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு
உறுப்பு
குறள்

# வலம்புரி

## காவிக்குள் கருணை!

இனப் பிரச்சினைக் குத் தீர்வு காண்பதற்கு நோர்வே அரசு சமாதான முயற்சியை மேற்கொண் டிருக்கும் போது பௌத்த மகா சங்கமும், சிஹல உறுமய, ஜே.வி.பி போன்றனவும் இனவா தத்தைக் கக்கிக்கொண்டு வெளிக்கிட்டன. இனப் பிரச்சினையை தீர்க்க வேண்டுமென்ற சிந்தனை எழும்போதெல்லாம் பௌத்த மகாசங்கம் கங் கணம் கட்டிக்கொண்டு காசி போவோம், கதிர் காமம் போவோம் என்று வெளிக்கிடுவர்.

உடன் அமைச்சர் பிர தானிகள் அஸ்கிரியபீடம் மல்வத்த பீடம் என்று ஓடிக் காவிகளின் காலில் விழுந்து ஐயா கோபம் தணிக்க! உம் எண்ணப் படியே நம் ஆட்சி, தமி ழரை வெட்டவா அல்லது சுட்டுக் கட்டவா திருவாய் மலர்ந்தருளுக இன்றே செய்வோம் என்று வேண்டுவர்.

இதனால் பௌத்த பிக்குகள் தமிழர்களின் எதிரிகளாகவே கருதப்பட் டனர். பிக்குகளும் தமது பெயர்கள் நாலு பேருக் குத் தெரியட்டும் என்ற நிலையில் வீதியில் இறங்கி உண்ணாநோன்பு இருந் ததும் உண்டு.

ஆனால் தமிழர்களின் விடயத்தில் அவர்களுக் குரிய விடயத்தில் அவர் களுக்குரிய உரிமைகளை வழங்க வேண்டும். இந்த இன யுத்தத்திற்கு முடிவு கட்ட வேண்டும் என்ற மனோ நிலையுடைய பௌத்த பிக்குகளும் இருக்கவே செய்கிறார்கள் என்பதை அறியும் போது காவிக்குள்ளும் கருணை உள்ளம் இருப்பதை உணரமுடிகிறது.

அண்மையில் வன்னிக்கு சமாதானப் பயணம் மேற் கொண்ட வடக்குக்கிழக்கு மாகாண சங்க நாயக்கர் சியம்ப கஸ்பவ விமலசார தேரர், கும்புறு கமுகே வஜ்ஜிரதேரர் போன்ற வர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளை உணர்ந் தவர்கள், தமிழ் மக்களும் இந்நாட்டில் சகல உரிமை களும் பெற்று சுதந்திர மாக வாழ வேண்டும் என்ற கருத்தைக் கொண் டவர்கள்.


புலிகளால் ஒரு தலைப் பட்சமாக அமுல் படுத்தப் படும் யுத்த நிறுத்தத்தை அரசாங்கம் ஏளனம் செய் யாமல் அதனை மதித்து பதிலுக்கு யுத்த நிறுத்தம் செய்ய வேண்டுமென வஜ்ஜிரதேரர் வலியுறுத்தி யுள்ளார். அது பாராட்டு தற்குரியதே.

---

வெள்ளி நற் சிந்தனை

# காசி விஸ்வநாதர் சந்நிதியை அணுகியவர்

# சகல பாவங்களுக்கும் விமோசனம் பெறுவர்



ஒரு சமயம் நர்மதை நதிக் கரையில் ஆனந்தமாக அமர்ந்து கொண்டிருக்கும் பருக முனிவரிடம் லோமசர் முதலான முனிவர்கள் காசி ஷேத்திரத்தின் மகிமையைப் பற்றி வினவும் போதும் பருக முனிவர் அவர்களை நோக்கி ஸ்ரீவிஸ்வநாதர் ஆகிய பிம் பங்கள் சிவனைக் குறிப்பன வாகும். இவருடைய பிரபா வத்தினால் காசியில் உயிர் து றக்கும் பாபதிதமாவின்உயிர் கூட சந்தேகமின்றி முத்தி எய் தும் காசி என்னும் வார்த் தையை சொல்வதினாலேயே மனிதர்களுடையே பாப ரூப மான மலை நாகமடைந்து ஞானம் கிட்டுவதினால் முத்தி அவசியம் கிட்டுகிறது காசி யில் நிரந்தரமாக வசிப்பவர் கள் உண்மையிலேயே அதிக புண்ணியம் செய்தவர்கள். காசி நகரத்தின் மாஹாத்மி யத்தைப் பற்றி எப்படி வர் ணனை செய்ய இயலும்என்று அறிவுறுத்தியுள்ளார் ப்ருகு முனிவர்.

### காமவசப்படல்

சத்தியபுரத்தில் வீராதி வீரரான பூரித்யும்னன்என்ற ராஜா அரசு புரிந்துவந்தான். அ◦னுடைய ஆயிரக்கணக் கான ராணிகளில் விபாவரா என்ற பெயருடைய பிரதம ராணியாவாள் தேவர்க ளைக் கூட வசியப்படுத்தும் காம தேவனுடைய வலையில் அவன்விழுந்ததால்அவன்முழு நாட்டையும் எதிரிகள் தங் கள் வசப்படுத்திக் கொண்டு விட்டனர். ராஜா பூரித்யும் னன் விபாவார ராணியை உடன் அழைத்துக் கொண்டு பயங்கரமான விந்திய மலைக் குச் சென்றான். கொஞ்ச நாட்களுக்குப் பிறகு ஒருந ள் ராஜாவிடம் ராணி சொன் னாள், தாங்கள் காமதேவன் வசப்பட்டு நாட்டையும் மற்ற ராணிகளையும் இழந்து விட் டீர்கள். இப்பொழுது நம் மால் மனித நாட்டமில்லாத இவ்வனத்தில் எங்ஙனம் வசிக்க இயலும், எந்த மனி தர்கள் தர்மம், பொருள் ஆகி யவற்றை தியாகம் செய்து விட்டு காம வசப்படுகிறார் களோ அவர்களுக்கு தங்க ளைப்போன்ற நிலைமைகள் தான் உண்டாகும். பிறகு அவர்கள் ராஜா ராணி என்ற நிலைமையை மறந்து தலை விதிப்படிநடப்பதைஉணர்ந்து திரிய ஆரம்பித்தார்கள்.

### கொலைகார எண்ணம்

ஒரு நாள் துக்கத்தால் பீடிக்கப்பட்ட ராஜா மனத் தில் ராணியைக் கொன்றுதின் போம் என்ற பாவமான எண் ணம் தோன்றியது. ராணிக்கு இந்த விஷயம் தெரிந்தவுடன் ராஜாவை நோக்கி தங்களு டைய முகத்தாமரை கவலை யால் பீடிக்கப்பட்டுள்ளது. இப்பொழுது என்னுடைய மாமிசத்தை உண்டு தாங்கள் உயிர் பிழையுங்கள் என்றாள் இதைக் கேட்ட அந்தக் கொடிய பாவி ராணியைக் கொன்று மாமிசத்தைத்தின்ன உட்கார்ந்த போது இரண்டு சிங்கங்கள் தங்களுக்குள் விளையாடிக் கொண்டு அங்கு வந்தன. சிங்கங்களைப் பார்த்த ராஜா பயந்து ஓடி னான். கொஞ்சத்தூரம்ஓடிய அந்தக் கொடிய கல் நெஞ்சம் படைத்தராஜா அங்கு 4 பிரா மணர்களைக் கண்டு அவர் களைக் கொன்று தின்ன

**ந. நவரட்ணம்**
அன்பகம்
ஆனைக்கோட்டை.

முயன்ற போது அவர்களு டைய பூணூலையும் மான் தோலையும பார்த்தவுடன் தெய்வா தீனமாகராஜாவுக்கு சுய அறிவு வந்தது. அவன் 'கெட்ட புத்தியில் விழுந்து ஸ்தரியையும், பிராமணர்க ளையும் கொன்று பிரம்ம ஹத்தி செய்தேன். இதனால் மனிதர்கள் நூறு பிறப்புகள் வரை நரகத்தில்வாசம்செய்ய நோக்கும். மேலும் ஸ்தரியின் கொலையால் ஐம்பது கல்பம் பாபம் சேரும் நான் பெரிய கொடிய பாவத்தைச் செய் துள்ளேன் என்று வருந்தி னான். இப்படி நினைத்துக் கொண்டே ராஜா பூரித்யும் னன் சாகல்ய முனிவரிடத்தில் சென்று நடந்தஎல்லாவற்றை யும் தெரியப்படுத்தி பிராயச் சித்தத்தைப் பற்றி வினாவி னான். அப்போது கருண பாவத்தோடு முனிவர் சொன் னார்.

### காசிதரிசன மகிமை

'ஏ துஷ்டனே இப்போது நீ கறுப்புத் துணியை உடுத்திக் கொள் எப்போது காசியை தரிசிக்கிறாயோ அப்போது துணிகள் வெள்ளையாகி விடும்.

இதனைக் கேட்டு பூரித்யும் னன் 7தினங்களி எல்லா ஜீவ ராசிகளின் பயத்தைப் போக் கும் காசியை அடைந்த போது காசியின் தரிசனத்தின் மூலம் எல்லாத் துணிகளும் வேனிற் காலத்தில் பிரகாசிக் கும் சந்திரன் ஒப்பவெண்மை யாக பிரகாசிக்க ஆரம்பித் தன. மேலும் இக் கொடிய பாவி காசியில் தினம் கங்கை யில் குளித்து விட்டுஸ்ரீவிஸ்வ நாதரை தரிசித்தும் வணங்க வும் ஆரம்பித்தான். 'கங்கை கங்கை தான்' என்று கோஷ மிட்டதன் மூலமாகவும் ஸ்ரீவிஸ்வநாதர்மணிகர்ணிகா ஆகியவர்களை தரிசித்து பூஜித்த தாலும்தாரகமந்திரத் தின் பிரபாவத்தால் இந்த ஷேத்திரத்தில் சிவபதவிய டையும் பாக்கியம் கிடைத் தது. இதனால் முனிவர் களே! காசியில் எந்த இட மாக இருந்தாலும்எத்தகைய கொடிய பாவிக்கும் இறக்கும் வாய்ப்புக் கிடைத்தால் அவ னுக்கு அவசியம் மோட்ஷம் கிட்டும் என்றால் தர்மம் செய்பவர்களைப் பற்றி சொல்ல என்ன இருக்கிறது.

---

ஐரோப்பிய பாராளுமன்ற குழுவிடம்

# முஸ்லிம்களின் அரசியல் எதிர்காலம் குறித்து ரவூப் ஹக்கீம் பிரஸ்தாபம்

[கொழும்பு]

வடபகுதியிலிருந்து முஸ்லிம் மக்கள் துப்பாக்கி முனையில் வெளியேற்றப்பட்டு கடந்த பத்து ஆண்டுகளாக அகதி முகாம்களில் வாழ்ந்து வரு கிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் ரவூப் ஹக்கீம் இங்கு விஜயம் செய் துள்ள ஐரோப்பிய பாராளு மன்ற குழுவிடம் தெரிவித துள்ளார்.

அவர்களை மீள சொந்த இடங்களில் குடியேற்றுவது தமது அரசியல் கோரிக்கை களில் முக்கிய அம்சங்களில் ஒன்றாகும் என்றும், வடக் கும் கிழக்கும் இணைக்கப்பட வேண்டும் என்ற தமிழ் அரசி யல் கட்சிகளின் கோரிக்கையி னால், கிழக்கில் வாழும் முஸ் லிம் சமூகத்தினர் இக்கட்டான நிலைக்கு தள்ளப்படுவார்கள் என்றும் ஹக்கீம் தெரிவித் துள்ளார்.

வடக்கும் கிழக்கும் நிரந் தரமாக இணைக்கப்படு மாயின் முஸ்லிம்களின் கதி என்னவென்பது குறித்தும் அவர் ஐரோப்பிய பாராளு மன்ற உறுப்பினரிடம் பிரஸ் தாபித்துளளார்.

வடபகுதியில் மக்கள் மீளக் குடியேறுவதற்கு தயாராக இல்லை. அதிகாரப் பரவலாக் கலினால் மாத்திரம் பிரச்சி னைக்கு தீர்வுகாண முடி யாது என்றும் மேலும் தெரி வித்துள்ளார், (உ-05)

# இலங்கை மீனவர்கள் அவுஸ்.சிறையில் அடைப்பு

[கொழும்பு]

அவுஸ்ரேலிய தடுப்பு முகா மில் குழப்பம் விளைவித்த இலங்கை மீனவர்கள் சிறை யில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியாக் கடலில் சட்டவிரோதமாகமீன்பிடித்த போது கைது செய்யப்பட்டு நன்நடத்தைச் தடுப்பு முகா மில் இவர்கள் அடைக்கப்பட் டிருந்தனர் என்பது குறிப்பி டத்தக்கது. (உ-9)

# காவலூரில் வீடற்ற மக்களுக்கு வீட்டுத்திட்டம்

அமைக்க அமைச்சிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை அண்ணா சனசமூக நிலையத்திற்குட் பட்ட பகுதிகளில் வீடற்றவர் களுக்கு வீட்டுத்திட்டம் ஒன்றை ஏற்படுத்தி வீடுகள் வழங்குமாறு ஊர்காவற் றுறை அண்ணா சனசமூக நிலைய நிர்வாகத்தினர் அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை ஊர்காவற்றுறை அண்ணா சனசமூக நிலைய நிர்வாகத் தினர் சந்தித்துப் பேச்சுநடத் தியதுடன், நிலைய எல்லைக் குட்பட்ட பகுதிகளில் உள்ள வீடற்றவர்களின் விபரத்தி னைக் கையளித்து ஊர்காவற் றுறையில் உள்ள 24 குடும்பங் களுக்கு வீட்டுத்திட்டத்தின் மூலம் வீடுகள் அமைத்துக் கொடுக்கும்படி கோரிக்கை விடுத்துள்ளனர். (உ)

---

மெய்வல்லுநர்

## போட்டி

(கோப்பாய்)

அவரங்கால் மகாஜனா வித் தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ் வுகள் விததியாலய அதிபர் அ.அருந்தவநேசன் தலைமை யில் இன்று பி.ப1 30 மணிய ளவில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந் தினராக கோப்பாய்க்கோட் டக்கல்விப் பணிப்பாளர் சி.சிவஞானசுந்தரமும் முதன்மை விருந்தினராக வலிகிழக்கு பிரதேச சபைத் தலைவர் பூ குணசிங்கமும் சிறப்பு விருந்தினராக கோப் பாய் பிரதேச செயலக திட்ட மிடல் உதவிப்பணிப்பாளர் ஆ சதிரமலைநாதனும், இலங் கைச் செஞ்சிலுவைச் சங்க கோப்பாய்க கிளைச் செயலர் சி மயில் வாகனமும் கலந்து கொள்ளவுள்ளனர் [ [உ-79

---

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில்

# 56 இலட்ச ரூபா செலவில் நுண்கருத் திட்டம்

[யாழ்ப்பாணம்)

யு.என்.எச்.சி.ஆர். நுண் கருத்திட்டத்தின் கீழ் 2000 ஆம் நிதியாண்டில் சண் டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் மற்றும் அவற் றுக்கு ஒதுக்கப்பட்ட நிதி விபரங்களை சம்பந்தப்பட்ட பிரதேச செயலகம் வெளியிட் டுள்ளது

அவற்றின் விபரம்வருமாறு,

சண்டிலிப்பாய் வடக்கு அ த.க. பாடசாலை கட்டட வேலை 5 இலட்சத்து 41 ஆயி ரத்து 375 ரூபா

ஆனைக்கோட்டை றோ.க. த.க. பாடசாலை கட்டட வேலை 5 இலட்சத்து 50 ஆயி ரம் ரூபா

மானிப்பாய் கிறீன் வைத் தியசாலை கட்டட திருத்த வேலை 4 இலட்சத்து 55 ஆயி ரத்து 132 ரூபா

பண்டத்தரிப்பு ப.நோ கூ சங்க மொத்த விற்பனை நிலைய திருத்தவேலை 6 இலட்சத்து 98 ஆயிரத்து 427 ரூபா

வடலியடைப்பு கக்கை தீவு பொதுக்கட்டடம் முறையே திருத்தமும், கட் டடமும் 6 இலட்சத்து 37

→ 2ஆம் பக்கம் பார்க்க

மங்கையர் மனங்களைக்
கொள்ளை கொள்ளும்
தங்க நகைகளைப்
பெற்றுக்கொள்ள

**நியூ நகுலா
ஜுவல்லறி**
74, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
[கி-1500]

## ஊரடங்கு நீக்கம்

(யாழ்ப்பாணம்)

உடுவில், தெல்லிப்பழை ஆகிய பிரதேச செயலர் பிரிவில் மாத்திரம் நாளை சனிக்கிழமை ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்படும் என யாழ். பாதுகாப்புத் தலைமைச் செயலகம் நேற்று அறிவித்துள்ளது.

இதற்கமைய இப் பிரதேச செயலர் பிரிவில் மாத்திரம் நாளை 24ந் திகதி மாலை 6.00 மணிமுதல் 25ந் திகதி காலை 6.00 மணிவரை ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டிருக்கும்.

இத்தகைய ஊரடங்குத் தளர்வு மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ள கலைநிகழ்ச்சியில் மக்கள் பங்குபற்ற வசதியாகவே ஏற்படுத்தப்பட்டுள்ளது. (இ)

## கண்ணாடி வழங்கல்

(மந்திகை)

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினால் நடத்தப்பட்ட கண்பரிசோதனைக்கான கண்ணாடி வழங்கும்வைபவம் எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மாவட்ட வைத்தியசாலையில் இடம்பெறவுள்ளது.

வைத்தியசாலை அபிவிருத்திச்சபைத தலைவர் டாக்டர் கே. மயிலேறும் பெருமாள் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் 180ற்கு மேற்பட்ட முதியோருக்கு கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன. (உ-23)

அதி நவீன
கருவிகள் மூலம்
ஒலிப்பதிவு செய்திடவும்
வீடியோ, ஸ்ரூடியோ,
மணப்பந்தல்
சேவைகளுக்கும்,

**மேகாஸ்
வீடியோ
அன்
ஒடியோ**
23, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி/1495)

**ஸ்ரீ செல்வா**
(யாழ்ப்பாணம்)
பிரசாந் - ஷாலினி
நடித்த
**பிரியாத வரம்
வேண்டும்**
10-30, 2-30 ப. நே)
(புதிய வெளியீடு)
CD பிரதி
(கி/1482

# தமிழ் மண்ணில் யுத்தம் நீங்கி சமாதானம் ஏற்பட உதவுங்கள்

## ஐரோப்பிய குழுவிடம் ஈ.பி.டி.பி. வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

எமது மண்ணில் யுத்த அவலம் நீங்கி, நிரந்தர சமாதானம் மலர்ந்திட, தங்களுக்கு உரித்தான வல்லமையினால் எம்மால் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் சிலவற்றை நிறைவேற்றித் தரும்படி எமது மக்கள் சார்பில் தங்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு ஈ.பி.டி.பி. அமைப்பாளர் நேற்றுக் காலை தம்மைச் சந்தித்த ஐரோப்பிய பாராளுமன்றத் தூதுக்குழுவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இச்சந்திப்பு ஈ.பி.டி.பி. யாழ்மாவட்டத் தலைமை அலுவலகத்தில் கட்சியின் செயலாளர்நாயகமும்வடக்கு கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு தமிழர் விவகார இந்து கலாசார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

இச்சந்திப்பின் போது மேற்படி கட்சியினரால் ஐரோப்பிய பாராளுமன்றத் தூதுக்குழுவினரிடம் கோரிக்கைகள் அடங்கிய மகஜரொன்றும் கையளிக்கப்பட்டது. அம்மகஜரில் உள்ள கோரிக்கைகள் வருமாறு,

★ மக்கள் வாழுகின்ற பிரதேசங்களில்குண்டு வெடிப்புக்கள், சுடுதல், குண்டுவீசுதல், யுத்தகளமாக்குதல் போன்ற தாக்குதல்களைப் புலிகள் நிறுத்த வேண்டும்.

★ மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், மற்றும் அரசியல் கருத்துடையவர்கள் ஆகியோரை கொலை செய்தல் மிரட்டுதல் கடத்தல் தாக்குதல் போன்றவற்றைப் புலிகள் நிறுத்திக்கொள்ளவேண்டும்.

★ யாழ். குடாநாட்டு மக்கள் இலகுவாக நாட்டின் ஏனைய பகுதிகளுக்குப் போக்குவரத்தினை மேற்கொள்ள தரைவழிப் பாதையைத் திறக்க வேண்டும்.

★ குடாநாட்டுக்குவெளியே மக்கள் போக்கு வரத்தினை மேற்கொள்ளப் பயன்படுத்தி வருகின்ற கடல், ஆகாய மார்க்கங்கள் புலிகளினால் தடைவிதிக்கப்பட்டுள்ளதுடன் தாக்கப்பட்டும் வருகின்றது. புலிகள் இத்தகைய போக்குவரத்து பாதைகள் மார்க்கங்கள் மீதுவிதித்துள்ள தடை உத்தரவையும் தாக்குதலையும் நிறுத்திக்கொள்ள வேண்டும். குடா நாட்டு மக்களுக்கான கடல் வழியிலான உணவு விநியோகத்திற்கு அனுமதிக்கவேண்டும்.

★ இலங்கையில் நிலவிவருகின்ற தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கு எக் காலமும் பிரிக்கப்படாத, வடக்குக் கிழக்கு மாகாணங்கள் இணைந்த ஒரு நிர்வாக அலகாகவுள்ள ஈழ மாநிலத்தில் நிலவுகின்ற சுயாட்சியினையே எமது தீர்வாக முன்வைத்துள்ளோம். இதனை அரசாங்கம், ஐக்கிய தேசியக் கட்சி, மற்றும் புலிகள் ஆகிய முக்கியமான அரசியல் சக்திகள் ஏற்றுக்கொண்டு இணக்கம் தெரிவிக்க உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு அம் மகஜரில் கேட்கப்பட்டுள்ளது. (இ-12-104-15)

**புலிகள்...**
அரசு நிராகரித்துள்ளதாக தகவல் தொடர்புப் பணிப்பாளர் ஆரியருபசிங்கா தெரிவித்துள்ளார். (ந)

**ஐரோ...**
நிறுவனங்களைச் சந்தித்துப் பேசினர். இச்சந்திப்பின்போது குடாநாட்டின் அரசியல் பாதுகாப்புமற்றும் பொருளாதார நிலமைகள் தொடர்பில் தூதுக்குழுவினருக்கு விரிவாக எடுத்துக்கூறப்பட்டது.

முன்னாள் இணையத் தலைவர் எஸ். பத்மநாதன்தலைமையில் இடம்பெற்ற மேற்படி சந்திப்பின் போது தமிழ் மக்கள் அனுபவித்து வரும் இன்னல்கள் மற்றும் அவர்கள் அரசியல் கலாசார ரீதியாக எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் பிரஸ்தாபிக்கப்பட்டது. (இ-2,36,12)

**ஆயிரம்---**
மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது இவ்ஊர்வலத்தில் சென்ற மக்கள் பதாதைகளைத் தாங்கியவாறும் கோசங்களை எழுப்பியவாறும் சென்றனர்.

இவ்ஊர்வலம் பிரதான வீதி, ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார்வீதிஊடாக ஸ்ரான்லிவீதியைச் சென்றடைந்து ஈ. பி. டி. பி அலுவலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்குமாறு தமது மகஜரைக் கையளித்தனர்.

இம்மகஜரை பெற்றுக்கொண்ட டக்ளஸ்தேவானந்தா இடம்பெயர்ந்த மக்களுக்கான ஆயிரம்வீட்டுத்திட்டத்தை உருவாக்கித் தருவதாக வாக்குறுதியளித்தார். (வ)

## யுத்த நிறுத்தத்தை...

மாதம் 24ம் திகதியில் இருந்து பெப்ரவரி மாதம் 24ம் திகதி வரை இரண்டாவது யுத்த நிறுத்த அறிவிப்பும் விடுதலைப் புலிகளால் ஒரு தலைப்பட்சமாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இரண்டாவது யுத்த நிறுத்தம் முடிவடைவதற்கு இன்னமும் 24 மணி நேரம் இருக்கையில் மூன்றாவது யுத்த நிறுத்த அறிவிப்பை விடுதலைப் புலிகள் நேற்று அறிவித்துள்ளனர்.

மூன்றாவது யுத்த நிறுத்த அறிவிப்புத் தொடர்பாக விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

**இரு யுத்த நிறுத்த அறிவுப்புக்களையும் அரசு நிராகரித்து எம் மீது போர் தொடுத்தது**

விடுதலைப் புலிகள் கடந்த இரு மாதகாலமாக ஒரு தலைப்பட்சமான யுத்த அறிவிப்பை அறிவித்தது மட்டுமல்லாமல் அதனைக் கண்ணியமான முறையிலும் பேணிவருகின்றது. ஆனால் இராணுவத்தினர் ஆத்திரமூட்டும் வகையில் எம் மீதுஇராணுவநடவடிக்கைகளைமேற்கொண்டு வருகின்றனர். நாம்யுத்த நிறுத்தத்தைப் பிரகடனம் செய்தபோது இலங்கைஅரசையும் யுத்தநிறுத்தம்செய்யுமாறு கோரி இருந்தோம் அதனை சந்திரிகா அரசுநிராகரித்தது மட்டுமல்லாமல் யுத்தநிறுத்தம் ஒருஅரசியல் ஏமாத்து வித்தைஎனவும் கேலிசெய்தது.

எமது யுத்தநிறுத்த காலத்தில் பெரும்படை எடுப்புக்கள் மேற்கொண்டு எம்மிடம் இருந்துநிலங்களைமீட்டெடுத்ததுடன் பெரும்உயிர்சேதங்களையும் ஏற்படுத்தினர். விடுதலைப்புலிகள் இக்காலத்தில் போர் நிறுத்தத்தை கட்டுப்பாடாகப் பேணியதுடன் தற்பாதுகாப்பு யுத்தத்தில் மட்டும்ஈடுபட்டனர்

**தமிழர் தாயகத்தில் அமைதியும் இயல்புநிலையும் தோன்ற வேண்டும்**

நோர்வே அரசின்சமாதான முயற்சிக்கு உரமூட்டுவதற்காக மேலும் கால அவகாசத்தைக்கொடுத்து சமாதான வழியில் அரசியல்தீர்வைக் காண்பதில் எமக்குள்ள நேர்மைகளையும் உறுதிப்பாட்டையும் எடுத்துக் காட்டினோம்.

தமிழர்தாயகத்தில் அமைதியும் இயல்புநிலையும் தோன்ற வேண்டுமென்பதே தமிழினத்தின்ஆழமான அபிலாசையாக இருப்பதால் சமாதானமுயற்சிக்கு முழுமையான சந்தர்ப்பங்களை வழங்குவதற்கு நாம்இயன்ற அளவுக்குமுயற்சிப்போம்.

இராணுவ ஆக்கிரமிப்புக்கும் அடக்குமுறைக்கும் சவால்விடுத்து பொங்கு தமிழராய் எழுச்சி கொண்டு விழித்துநிற்கும் எமதுமக்கள் சமாதானத்திற்காகவும் சுயநிர்ணயஉரிமைக்காகவும்குரல் எழுப்பிவருகின்றனர். தமிழ்த் தேசத்தின் இந்தஒன்றுபட்ட பேரெழுச்சிக்குஒத்திசைவாகவே நாம்சமாதானப் பாதையைகடைப்பிடிக்கமுடிவெடுத்தோம்.

**எமது பலவீனம் என்று அரசு ஏளனம் செய்கிறது!**

எமது சமாதான முயற்சிக்கு இது வரை ஸ்ரீலங்கா அரசு ஆக்கபூர்வமான பதிலைத் தரவில்லை, இது கவலையையும், ஏமாற்றத்தையும் அளிக்கிறது. இராணுவ பலவீனத்தை மூடி மறைத்தாலும் அரசியல் ஏமாற்று வித்தையில் ஈடுபட்டிப்பதாக அரசு எம்மை ஏழனம் செய்கிறது. அரசு சமாதானத்திற்கான கதவுகளை மூடிவிட்டு தனது ஆயுத வல்லாண்மையைப் பலப்படுத்த பல கோடிக் கணக்கான ரூபாக்களுக்கு ஆயுதங்களைக் கொள்வனவு செய்து குவித்து வருகிறது.

எமது போர்நிறுத்தத்தை நிராகரித்து நோர்வே அரசின் புரிந்துணர்வு உடன்பாட்டை ஏற்றுக்கொள்ளாது பேரழிவினை ஏற்படுத்தும் இராணுவத் தீர்வில் சந்திரிகா அரசு முனைப்புடன் செயற்படுகிறது.

**சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்கவேண்டும்**

நோர்வே அரசின் புரிந்துணர்வுடன்பாட்டை ஏற்றுக்கொண்டு பொருளாதாரத் தடைகளை நீக்கி யுத்த நெருக்கடிகளைத் தணித்து இயல்பு நிலையைத் தோற்றுவிக்கவும் எமது போர்நிறுத்தத்தை ஏற்று அமைதியைப் பேணுவதற்கும் அரசுஇணங்க வேண்டும்.

இத்தகைய நல்லெண்ண சூழ்நிலையை உருவாக்க அரசாங்கம் முன்வருமானால், சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்ற நாம் தயாராக இருக்கின்றோம். சிறிலங்கா அரசானது தனது அழிவுப் பாதையைக் கைவிட்டு சமாதான வழியில் இனநெருக்கடிகளைத் தீர்க்க உலகநாடுகள் வற்புறுத்த வேண்டும்.

குறிப்பாக அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா, ஐரோப்பிய நாடுகள் தமது இராஜதந்திர செல்வாக்கைப் பிரயோகித்து சிறிலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று விடுதலைப் புலிகளின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை விடுதலைப் புலிகள் மூன்றாவது யுத்த நிறுத்தத்தை நீடிப்பு அறிவிப்பு நேற்று வெளியான போதும், ஜனாதிபதிசந்திரிகா பண்டாரநாயக்க ஐந்துநாள் உத்தியோக பூர்வ விஜய மேற்கொண்டு நேற்று இந்தியா புறப்பட்டு சென்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (வ)

கண்ணைக்கவரும் தங்க
நகைகளை
உங்கள் எண்ணம் போல்
செய்து தருபவர்கள்

**சாரங்கா
நகைமாடம்**
177/4. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
[கி-1503]

## மார்ச் 8ல் வரவு-செலவுத் திட்டம்

(கொழும்பு)

இலங்கையின் வரவு செலவுத்திட்டம் வரும் மார்ச் மாதம் 8 ஆம் திகதி திட்டமிட்டபடி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வரவு செலவுத்திட்டம் மீதான விவாதம் மார்ச் 12 ஆம் திகதி ஆரம்பமாகும்.

மார்ச் 17,24,31 ஆம்திகதிகளிலும் விவாதம் நடைபெறும் எனவும், ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி வரவு செலவுத்திட்ட விவாதங்கள முடிவுக்கு கொண்டு வரப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-9]

## இன்று சந்திப்பு

[வாஷிங்டன்]

ஈராக் மீதான பொருளாதாரத் தடைகளை நீக்குவது குறித்து ஆராய்வதற்காக அமெரிக்க ஜனாதிபதியும் பிரிட்டிஷ் பிரதமரும் இன்று வெள்ளிக் கிழமை சந்தித்துப் பேசவுள்ளனர்.

ஈராக் தொடர்பான அமெரிக்காவினதும், பிரிட்டனதும் நிலைப்பாடுகள்பற்றி ஆராய்வதற்காகவே இவ்உயர் மட்ட மகாநாடு கூட்டப்படவுள்ளது.

இச்சந்திப்பின் போது ஈராக்கின் ஆயுத இறக்குமதியைக் கட்டுப்படுத்துவது, பொதுமக்களின் பாவனைப்பொருட்கள் மீது விதிக்கப்பட்ட தடைகளைத் தளர்த்துவது போன்ற விடயங்கள் குறித்து ஆராயப் படவுள்ளன.

(செ)

**கப்பலில்...**
யோகத்தர் அவரை அழைத்துச் செல்ல முற்பட்ட போது அவரைத் தாக்கிவிட்டு தப்பியோடியதாக தெரிவிக்கப்படுகிறது.

தப்பியோடிய சிறைக்கைதியை பிடிப்பதற்கு நேற்று வரை எடுத்துக் கொண்ட முயற்சிகள்யாவும் தோல்வியில்முடிவடைந்தது.

தப்பியோடிய இக்கைதியை யாழ் சிறைச்சாலைப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் யாழ் பஸ்நிலையம் வந்து பொறுப்பேற்க இருந்தசமயமே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. கப்பலில் அழைத்துவரப்பட்ட ஒன்பது சிறைக்கைதிகளும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ்கைது செய்யப்பட்டவர்களாவர். (வ-12)

இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது;